ISSN 1391-9504




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மோசமடைந்த மதப் பிரச்சினை

ஒல்லாந்தரின் மதத்தைத் தழுவியதாக, பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோரின் பெயர்கள் பதிவேடுகளில் பதிவாகின. எனினும், அவர்களுக்கு சமயத்தைக் கற்பிக்கவோ, மதப் பணிபுரியவோ, இருக்கும் குருவானவர்களைப் பராமரிக்கவோ ஒல்லாந்தர்கள் பின் வாங்கினர்.


அந்நேரத்தில், இந்நாட்டில் ஒல்லாந்த திருச்சபையின் குருவானவர்கள் பன்னிரெண்டாயிரம் பேர் இருந்தனர். அதிக காலம் செல்லவில்லை, ஒல்லாந்தரின் சமயத்தைப் பின்பற்றியோர் ரகசியமாக அவர்களின் முன்னைய மதங்களையும் பின்பற்றுகின்றனர் என்பதை குருவானவர்கள் அறிந்துகொண்டனர். அதனால், அவர்கள் மனமுடைந்து, ஒல்லாந்தத் தலைவர்களை சந்தித்தனர். மக்கள் தனிப்பட்ட ரீதியில் முன்னர் பின்பற்றிய மதங்களை அனுஷ்டிப்பதை உறுதியாகத் தடை செய்யும்படி கேட்டுக்கொண்டனர். எனினும், அவ்வாறு கட்டளையிடுவது இலகுவான விடயமல்ல என ஒல்லாந்தத் தலைவர்கள் உணர்ந்து கொண்டனர்.

இதற்கிடையில், ஒல்லாந்தர் மீண்டும் கண்டி மன்னனுடன் நட்புறவு பூண்டனர். பர்மாவில் இருந்து பௌத்த பிக்குகளை அழைத்துவர உதவினர். அதனை அறிந்த மக்கள் மன்னனுடன் தொடர்பு கொண்டனர். அத்தோடு, ஒல்லாந்தரின் கீழுள்ள பிரதேச மக்களுக்கு மதச் சுதந்திரமும் விகாரைகளில் வழிபடும் சுதந்திரமும் மீண்டும் பெற்றுக்கொள்ளப் பேச்சுவார்த்தை நடத்துவதென கண்டியில் தீர்மானித்தனர். அதற்காக பிரதிநிதிகள் குழு ஒன்று கொழும்பிற்கு வந்தது.

இந்நிகழ்வு, கி.பி 1688 இல் நடைபெற்றது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது ஒல்லாந்தருக்கு இலகுவான காரியமாக இருக்கவில்லை. அத்தோடு, மன்னனையும் புதிதாக நட்புறவுகொண்ட பௌத்த மதத் தலைமைப் பிக்குகளையும் பகைத்துக்கொள்ள ஒல்லாந்த தலைவர்கள் விரும்பவில்லை. மறுபக்கமோ, ஒல்லாந்த திருச்சபையைச் சார்ந்த குருக்கள் இத்தீர்மானங்களுக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். அதனால், இப்பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்த மேலும் காலஅவகாசம் தரும்படி மதகுருமார்களிடம் ஒல்லாந்த ஆளுனர் கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் குடியேற்றப்பட்ட பிரதேச ஆசிரியர்களுக்கு போக்குவரத்தில் சிரமம்



வடக்கில் மீள் குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு முறையான போக்குவரத்து வசதிகள் இல்லாமையினால், அவர்கள் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்த ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்வது மற்றும் பாடசாலையிலிருந்து திரும்புவதற்கு இரண்டு இலவச பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்ற போதிலும், அது போதியதாக இல்லை என்றும் அந்த சேவை குறித்த ஒரு பிரதேசம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி ஆசிரியர்கள் வடமாகாண ஆளுநருக்கு முறையிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்தும் வவுனியாவிலிருந்தும் ஆசிரியர்கள் தினமும் காலை, மாலை இலவசமாக செல்வதற்கென சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இந்த பஸ் போக்குவரத்து சேவை கிளிநொச்சி-மல்லாவி வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மல்லாவியிலிருந்து முல்லைத்தீவு மற்றும் ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு செல்லும் ஆசிரியர்கள் இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர். எனவே, மேற்படி பஸ் போக்குவரத்து சேவையை விஸ்தரிக்குமாறு அல்லது அது தொடர்பில் மாற்று நடவடிக்கைகளை செயற்படுத்துமாறு குறித்த ஆசிரியர்கள் ஆளுநரிடம் கோரியுள்ளனர்.

மீள் குடியேற்றப்பட்ட பிரதேச பாடசாலைகளுக்கு யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பிரதேசங்களிலிருந்து தினமும் சுமார் 500 ஆசிரியர்கள் வருகை தருவதோடு, அவர்கள் பயணிப்பதற்கு இரண்டு பஸ்கள் போதாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## நாடளாவிய ரீதியிலான
# பாடசாலை சுவரொட்டிப் போட்டி

சனத்தொகை கணிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் நாடளாவிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான சுவரொட்டிப் போட்டியொன்றை நடாத்த



நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கனிஷ்ட பிரிவு (தரம் 6 முதல் 9 வரை) மற்றும் சிரேஷ்ட பிரிவு (தரம் 10 முதல் 13 வரை) என்ற இரு பிரிவுகளாக போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. குடிசன மற்றும் குடியிருப்பு மதிப்பீட்டுடன் தொடர்புடைய தொனிப்பொருளுக்கமைய, 17''×22'' அளவிலான வெள்ளைநிற வரைதல் தாளில் அல்லது கென்ட் கடதாசியில், போஸ்டர் சாயம் அல்லது நீர்ச்சாயம் அல்லது கறுப்பு நிறப்பூச்சு என்பனவற்றைப் பயன்படுத்தி ஆக்கம் உருவாக்கப்படல் வேண்டும்.

சுயமாகத் தயாரித்த விண்ணப்பத்தில் சகல விபரங்களையும் எழுதி, அதனை சுவரொட்டியின் பின்புறத்தில் ஒட்டி, அதிபர் மற்றும் ஆசிரியரின் உறுதிப்படுத்தலுடன் பணிப்பாளர், மதிப்பீட்டுப் பிரிவு, குடிசன மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், 16/7, எல்பட் வளைவு, கொழும்பு-07 என்ற முகவரிக்கு 2010 ஜூலை 31 இற்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும் என அத்திணைக்களம் அறிவித்துள்ளது.

# 'சேகரிப்போம் சுவீகரிப்போம்' பரிசுப் போட்டி

* பாடசாலை பேக்ஸ்,
* டீ-ஷேர்ட்ஸ்,
* டீ-மக்ஸ்,
* கெப்ஸ்களை

வெல்லுங்கள்!

இந்த வாரம் தொடக்கம் 'விஜய்'யில் இலங்கை வரைபடமானது பன்னிரெண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு வாரத்திலும் பிரசுரிக்கப்படும். அவ்வாறு வாராவாரம் பிரசுரிக்கப்படுகின்ற பகுதிகளை தொடர்ச்சியாக சேகரித்து வாருங்கள். பன்னிரெண்டு பகுதிகளையும் சேகரித்த பின்னர், இலங்கையின் வரைபடம் முழுமைப்படும் வகையில் அவற்றை ஒழுங்கமைத்து-தபால் அட்டையில் ஒட்டி-எமக்குத் தபாலிட்டு பரிசுகளை சுவீகரித்துக்கொள்ளுங்கள்.
முழுமைப்படுத்தப்பட்ட வரைபடத்தை தபாலிட வேண்டிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 011-2479653 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.



**வெற்றி பெறுவோருக்கான பரிசுகள்**

10 பேருக்கு - பாடசாலை பேக்ஸ் (School bags)
15 பேருக்கு - டீ-ஷேர்ட்ஸ் (T-Shirts)
100 பேருக்கு - கெப்ஸ் (Caps)
100 பேருக்கு - டீ-மக்ஸ் (Tea mugs)

**விதிமுறைகள்**

* ஒருவர் எத்தனை விண்ணப்பங்களையும் அனுப்பலாம்.
* விண்ணப்பங்களை தபாலட்டையில் மாத்திரமே அனுப்புதல் வேண்டும்.
* தபாலுறையில் அனுப்புபவை நிராகரிக்கப்படும்.
* நிழற்பிரதிகள் (Photo copy) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இந்த வார பாகம்
இல: 01




# யாழ்.கோட்டையை பாதுகாப்பதற்கு நடவடிக்கை



வரலாற்று முக்கியத்துவம் மிக்க யாழ்ப்பாணக் கோட்டையை பாதுகாப்பதற்காக தொல்பொருளியல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக நெதர்லாந்து நாட்டின் நிதியுதவியின்கீழ் 104.05 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தேசிய மரபுரிமை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார். வரலாற்று முக்கியத்துவம் மிக்க இக்கோட்டை அகழியில் நிரம்பியுள்ள சகதி மற்றும் கண்ணிவெடிகள் என்பனவற்றை அகற்றுதல், கோட்டை-அரண் மற்றும் அதனுள் அமையப்பெற்றுள்ள வரலாற்று முக்கியத்துவம் மிக்க தூபிகள் என்பனவற்றைப் பாதுகாத்தல் என்பன இந்த வேலைத் திட்டத்தினுள் அடங்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மார்ட்டின் விக்ரமசிங்க நூல் வெளியீடு

இலக்கிய கர்த்தா மார்ட்டின் விக்ரமசிங்கவின் 34 ஆவது வருட நினைவு நாள் இம்மாதம் 23 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. அதனையொட்டி மார்ட்டின் விக்ரமசிங்க அறக்கட்டளை நிறுவனம் அவரின் நூல்கள் மற்றும் புகைப்படக் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. இக்கண்காட்சி ஜூலை 17 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி முதல் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெறும்.

மாலை 4.30 மணிக்கு கிராமப்பிறழ்வு, தேர்ந்தெடுத்த சிறுகதைகள், மடொல்தீவு ஆகிய மூன்று மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிடப்படவுள்ளன. இம்மூன்று நூல்களையும் முறையே மு.உவைஸ், பேராசிரியர் சபாஜெயராசா, சௌமியன் சுந்தரம் ஆகியோர் மொழிபெயர்த்துள்ளனர்.

இவ்விழாவுக்கு மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் தலைமை தாங்குவதோடு, பிரதம அதிதியாக பேராசிரியர் சந்திரசேகரனும் கலந்து கொள்வார். கிராமப்பிறழ்வு, தேர்ந்தெடுத்த சிறுகதைகள், மடொல்தீவு ஆகிய நூல்கள் முறையே தம்பு சிவசுப்பிரமணியம், முருகேசு ரவீந்திரன், சு.முரளிதரன் ஆகியோரால் திறனாய்வு செய்யப்படவுள்ளன. மார்ட்டின் விக்ரமசிங்கவின் நூல்களில் தமிழ் மொழி பெயர்ப்புக்களும் சிங்களத்திலிருந்து தமிழுக்கான மொழிபெயர்ப்புக்களும் என்ற தலைப்பில் மு.மயூரன் உரை நிகழ்த்துவார். இத்தினத்தில் மார்ட்டின் விக்ரமசிங்கவின் வாழ்க்கை பற்றிய குறுந்திரைப்படமும் திரையிடப்படவுள்ளது.

மார்ட்டின் விக்ரமசிங்க அறக்கட்டளை நிறுவனத்தின் இணையத்தள முகவரி : www.martinwickramasinghe.org

60 நாட்களில் ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளுங்கள்
இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி
E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத.வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது. (வயது கட்டுப்பாடு தேவையில்லை)
60 நாட்கள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.
இலவச T.Shirt ஒன்றும் Phone Sim English Book என்பன இலவசம்



பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும் 30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்



இலவச Phone Sim
மேலதிக விபரங்களுக்கு பெயர்.முகவரியை 0777-220002 க்கு SmS செய்யுங்கள்
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனங்கவரும் மலர் ரோஜா



**கருஞ்சிவப்பு, இரத்தச் சிவப்பு, வெண்சிவப்பு, மஞ்சள், வெண்மை மற்றும் நிறங்களில் ரோஜாப்பூக்களைக் காணலாம். இவற்றில் மணத்திலும் தோற்றத்திலும் முதன்மை பெற்று விளங்குவது இளஞ்சிவப்பு நிற ரோஜாவே. ரோஜாச் செடிகள் குத்துச் செடியாகவும் வளரும். அதே நேரத்தில் தரை, மரம், சுவர்களில் கொடிகளாகவும் படர்ந்து வளரும். இதன் தண்டுகளில் சிறு சிறு முட்கள் காணப்படும். இதன்மூலம், மென்மையும் அழகும் மிக்க மலர்கள் பாதுகாக்கப்படுகின்றன. இதன் பூக்கள் தனியாக சிறு கிளைகளில் பூக்கும். கொடியாக வளரும் வகைகளில் அவை கொத்துக் கொத்தாகக் காணப்படும்**

ரோஜாப் பூக்களை சாப்பிடுவது சிறந்த மருந்தென்று புராதன இந்திய மருத்துவர்கள் கருதினர். இதனை இன்றைய மருத்துவமும் ஆராய்ந்து ஒப்புக்கொண்டுள்ளது.

ரோஜா இதழ்களை உண்பதால், மலச் சிக்கலைப் போக்கலாம். அத்துடன், தொண் டைப்புண்ணை குணமாக்கும் திறன் ரோஜாப் பூவுக்கு உண்டு. ரோஜாப் பூ, தேன், கல்கண்டு ஆகியவற்றைக் குழைத்து 'குல்குந்து' என்ற சுவையான பதார்த்தம் செய்யப்படுகின்றது. இதனை உட்கொள்வதன் மூலம் மலச்சிக்கலைப் போக்கி, நரம்பு மண்டலத்தைச் சீராக்கி உடலை நோய்கள் அணுகாதவாறு பாதுகாக்கலாம். ரோஜாப் பூவின் நறுமணமானது, தலைவலியை நீக்கக்கூடிய சக்தியைக் கொண்டது.

அத்துடன், ரோஜாப் பூவிலிருந்து அழகிய மாலைகள் கட்டப்படுவதுடன், அத்தர், பன்னீர் என்பனவும் தயாரிக்கப்படுகின்றன. ஒரு கிராம் அத்தர் செய்ய 2500 ரோஜாப் பூக்கள் தேவைப் படுகின்றன. அந்தவகையில், இந்தியா, பாரசீகம், பல்கேரியா ஆகிய நாடுகள் ரோஜாப் பூவிலிருந்து அத்தர் தயாரிக்கின்றன.

இவ்வாறு வைத்தியத் தேவைகளுக்கும் அழகை ரசிப்பதற்கும் பயன்படும் ரோஜாப் பூவானது பல்வேறு சந்தர்ப்பங்களில் உலக சரித் திரங்களில் இடம்பெற்றுள்ளன. 15 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தின் லங்காஷ்யர்களுக்கும் யார்கிஸ்டுகளுக்கும் இடையில் நடைபெற்ற உள்நாட்டுப் போர்கள் 'ரோஜா யுத்தங்கள்' என்று அழைக்கப் பட்டன. முறையே இரு தரப்பினரும் வெள்ளை, சிவப்பு ரோஜாக்களைத் தமது சின்னங் களாகக் கொண்டு போரிட் டமையால் இப்போர்கள் இவ்வாறு அழைக்கப்பட்டன. தவிர, இங்கிலாந்தின் தேசிய மலராகவும் ரோஜாவே திகழ்கின்றது.

ரோமானியர்களின் வரலாற்றில் ரோஜாப் பூ விழாக்கள் பற்றிய கருத் துக் குறிப்புக்கள் இருக்கின்றன. அவர்கள் திருமணம், பந்தயம், வரவேற்பு முதலியவற்றுக்கெல்லாம் ரோஜா மலர்களையே பயன்படுத்தி இருக்கின்றார்கள். பொதுவாக அனைத்து நாடுகளில் விசேட நிகழ்வுகளின் போது ஆண்கள் தமது கோட்டுப் பைகளில் ரோஜாப் பூக்களைச் செருகிக் கொள் வதில் பெருமித மடைவர்.

ரோஜாப் பூ பற்றி உலக நாடுகளில் விந்தையான, சுவைமிக்க பல கருத்துக்கள் நிலவுகின்றன. பாரசீகர்கள் மாதுளம் பூவையும் ஆங்கிலேயர் செர்டரிப்பூவையும் ரோமானியர் முந்தி ரிப் பூவையும் விரும்புவது போலவே, பிரான்சியர் ரோஜாப் பூவை அதிக மாக விரும்புகின்றார்கள். பிரான்ஸ் பெண்கள் தமது இரத்தத்தில் ஒரு துளியை எடுத்து ரோஜாச் செடியின் வேரில் விட்டால், தங்கள் கன்னங்கள் ரோஜாவைப் போலவே சிவக்கும் என்று ஒரு நம்பிக்கையைக் கொண்டுள்ளார்கள்.

துருக்கியப் பெண்கள் தாங்கள் மணம் செய்துகொள்ள விரும்பும் ஆடவரின் பெயர்களை ரோஜா இதழ்களில் எழுதி, நீரில் மிதக்க விடுகிறார்கள். எந்த இதழ் அதிக நேரம் நீரில் மிதக்கின்றதோ, அந்த இதழில் எழுதப்பட்டிருக்கும் பெயர் கொண்ட ஆடவனையே தங்கள் கணவனாகத் தேர்ந்தெடுக்கின்றார்கள்.

**15 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தின் லங்காஷ்யர்களுக்கும் யார்கிஸ்டுகளுக்கும் இடையில் நடைபெற்ற உள்நாட்டுப் போர்கள் 'ரோஜா யுத்தங்கள்' என்று அழைக்கப்பட்டன. முறையே இரு தரப்பினரும் வெள்ளை, சிவப்பு ரோஜாக்களைத் தமது சின்னங்களாகக் கொண்டு போரிட்டமையால் இப்போர்கள் இவ்வாறு அழைக்கப்பட்டன**

இலையுதிர் காலத்தில் வீட்டில் உள்ள ரோஜாச் செடிகளில் வெள்ளை ரோஜா மலர்ந்தால், வீட்டில் இழப்பு ஏற்படும் என்றும் சிவப்பு ரோஜா மலர்ந்தால், திருமணம் நடக்கும் என்றும் பொதுவாக அமெரிக்கர்களிடையே ஒரு நம்பிக்கை நிலவுகின்றது.


இவ்வாறு, ரோஜா மீது பல்வேறு நாடு களில் உள்ள மக்களும் பல்வேறு விதமான நம்பிக்கைகளைக் கொண்டிருக்கின்றனர். ரோஜா மித வெப்பமான குளிர் பகுதிகளில் செழிப்பாக வளரும்.இந்தியா, ஆபிரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் அதிகமாக வளர்ந்தாலும்கூட, பொதுவாக உலகி லுள்ள அனைத்து மக்களும் இதனை மிகவும் பிரியமாகவே வளர்க்கின்றனர்.

**ஐ.ஏ.ஸத்தார்**

# திறமைமிகு கட்டடக்கலைஞன் கறையான்







உயிரினங்களிலேயே மிகத் திறமையுள்ள கட்டடக் கலைஞன் என்று கறையானைக் குறிப்பிடலாம். சிறிய உயிரினமான இவை மிகப்பெரிய புற்றுகளைக் கட்டுகின்றன. கறையான்களின் அளவுடன், அவை கட்டும் புற்றுகளை அளவிடுவோமானால் அவை மிகப் பெரியவையாகும்.

2 செ.மீ நீளம் கூட இல்லாத ஒரு கறையான், பல மீற்றர் உயரமுள்ள புற்றைக் கட்டுகிறது. பெரும்பாலான கறையான் புற்றுகள் இரண்டு முதல் மூன்று மீற்றர் வரை உயரம் உள்ளவையாக இருக்கின்றன. அனேகமாக கறையான் புற்றுகள் கூம்பு வடிவமாகவோ, காளான் வடிவமாகவோ, மேற்புறம் வட்ட வடிவமாகவோ இருக்கலாம். இவை, புற்கள் சிறு புதர்களால் மூடப்பட்டிருக்கலாம்.

கறையான் புற்றுகள் தரைமட்டத்தைவிட உயர்ந்து காணப்பட்டாலும் அவற்றில் நல்ல காற்றுப்போக்கு வசதி இருக்கிறது. அதற்கென குறுகலான வழிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கட்டுப்படுத்திய வெப்பம், ஈரப்பதத்துடன், இவை வசதியான வதிவிடங்களாக உள்ளன.

கறையான் புற்றிலிருந்து பெறப்படும் மண், முகப்பூச்சுப் போன்ற அழகுச் சிகிச்சைகளிலும் படகுகளில் நீர்க் கசிவைத் தடுக்கவும் பயன்படுத்தப்படுகிறது. கறையான்கள் ஒருவித சுரப்பைக்கொண்டு தங்களின் புற்றைக் கனமாக்குகின்றன. அந்தச் சுரப்பை ஆராய்ந்து, சாலைகள் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் 'ஆஸ்பால்ட்'டுக்கு மாற்றுப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ரசாயன உரங்களுக்கு மாற்றாகவும் கறையான் புற்று மண்ணை உபயோகப்படுத்த முடியும். செரிமானப் பிரச்சினைகள், தோல் நோய்களைக் குணப்படுத்துவதற்கு கறையான் மண்ணை பழங்குடியின [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

## முகாமைத்துவம் - 11

**1. உடனடி இலக்கு (Immediate Goal):**
மிகச் சிறிய காலம் ஒன்றை நோக்கிய இலக்காகும். தனி மனிதன் ஒருவனின் குவிவு மையம் இதுவாகத்தான் இருக்க வேண்டும். நீண்டகால இலக்குகளின் அடித்தளம் இதுவாகும்.

# இலக்குகளின் வகைகள்

**2. குறுங்கால இலக்கு (Short term Goal):**
குறுங்கால இலக்குகளின் மொத்தம் நீண்டகால இலக்குகள் ஆகும்.ஒவ்வொரு குறுங்கால இலக்குகளும் முடிவடைய, முடிவடைய மனமகிழ்ச்சி ஏற்படுவதுடன் ஊக்கமும் வளர்ச்சி யடையும்.

**3. நீண்ட கால இலக்கு (Long term Goal):**
இது 5-10 வருட கால இடைவெளியில் அமையும். (இருதய சத்திர சிகிச்சை நிபுணராக வர வேண்டும் என்பதை உதாரணமாக குறிப்பிடலாம்).




### இலக்குகளில் தாமதம் ஏற்படுவதை தவிர்ப்பது எப்படி?

- கவலைப்படுவதைத் தவிர்த்தல்-அதாவது, செய்வதை விடுத்து செய்வதைப் பற்றிக் கவலைப்படுதல்.
- சிறியதாக ஆரம்பித்தல்-சிறிய சிறிய இலக்குகள், சிறிய சிறிய செயற்பாடுகளை ஆரம்பித்தல்.
- செலவினம் பற்றிக் கவனம் செலுத்துதல்.

**இது தொடர்பில் இரு பட்டியல்களைத் தயாரிக்குக;**

1. நீங்கள் எடுத்துக்கொண்ட செயற்பாட்டில் தவிர்த்துக் கொள்ள வேண்டிய மகிழ்ச்சி யற்ற விடயம்.
2. குறிப்பிட்ட விடயத்தைத் தவிர்த்துக்கொள்வதால், ஏற்படும் விளைவுகள் பற்றிய பட்டியல்.



- எதிர்மறையான நம்பிக்கை

## கற்றலுக்கான ஆலோசனைகள்

வேண்டாம். உதாரணம்;
"நான் அதைச் செய்யப் போவதில்லை", "நான் வெற்றி பெற்றால் என்ன நடக்குமோ?" போன்ற எண்ணங்கள்.

- ஒவ்வொரு தாமதத்திற்கும் நீங்களே பொறுப்பு என்பதை உணருங்கள்.
- ஒரு செயற்பாடு முடியும் முன்னர் இன்னொரு செயற்பாட்டை ஆரம்பிக்க வேண்டாம்.
- அடிப்படைச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளியுங்கள்.



இலக்குகளை அடிக்கடி மாற்றக்கூடாது.ஏனெனில்; ஒவ்வொரு இலக்கும் வெவ்வேறு நோக்கங்களைக் கொண்டிருப்பதால், செயற்பாடுகள் சீர்குலையும். இதனால், தாமதம் ஏற்படும். செயற்பாடுகளில் உறுதியற்ற திறன் காணப்படும். கல்வி நடவடிக்கையில் வரும் தோல்விகளைக்கண்டு துவண்டு போகாமல் அதிலிருந்து விடுபட்டு இலக்குகளை உருவாக்கி, அதன்படி கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். எனவே, கல்வி எனும் வீட்டைக் கட்ட மாணவர்களாகிய நீங்கள் இலக்கு எனும் அத்திவாரத்தை நிர்ணயித்துக்கொள்ளுங்கள்!

(தொடரும்...)

**-எம்.ஏ.எஃப்.சப்ரானா**

### இலக்குகளை அடைவது குறித்து பிரபலங்கள் சொன்னவை

- நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்க முடியாது
  *-ஜோன்ஸன்*
- இலட்சியத்தை அடிக்கடி மாற்றக்கூடாது-நெப்போலியன்
- எல்லாச் சாதனைகளும் ஓர் ஆசையில் இருந்துதான் தொடங்குகின்றன. இதை எப்போதும் மனதில் நிறுத்துங்கள். பலவீனமான ஆசைகள் பலவீனமான வாழ்க்கையையே கொடுக்கும். சிறிய அளவிலான நெருப்பு சிறிதளவு வெப்பத்தைத் தரக்கூடியது போல *-நெப்போலியன் ஹில்*
- எப்பொழுதும் வீழ்ச்சியடையாமல் இருப்பதில் எந்தப் பெருமையும் கிடையாது. பெருமையானது ஒவ்வொரு முறை விழுந்த பின்னரும் எழுவதில்தான் உள்ளது.
  *-கொன்ஃபியூஷியஸ்*




HNB
சிங்கிதி

2010

கல்வி அமைச்சு

**ஹற்றன் நஷனல் வங்கி கல்வி அமைச்சுடன் இணைந்து நடாத்தும்**

**அகில இலங்கை பாடசாலைகளுக்கான சித்திர, சிறுகதை, கட்டுரை, தனிப்பாடல், பேச்சு, குறுநாடகப் போட்டிகள்**

**சித்திரம்** (ஆண்டு 1-13)

சித்திரத்திற்கான விடயப்பொருள் - (1) "எனது கிராமம்"
(2) "நான் மிகவும் விரும்பும் தேசியவிழா".
(3) "இயற்கையின் எழில்"

**சிறுகதை** (ஆண்டு 9-13 சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்)

**கட்டுரை** (ஆண்டு 9-13 சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்)

கட்டுரைக்கான விடயப்பொருள் - "தகவல் தொழில் நுட்பமும் சிறுவர்களும்".
சொற்கள் 1000 தொடக்கம் - 1500 வரை.

**தனிப்பாடல்** (ஆண்டு 6-13 சிங்களம்/தமிழ்)

**பேச்சு** (ஆண்டு 9-13 சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்)

பேச்சிற்கான விடயப்பொருள் - "கல்விச் செல்வம் என்றும் அழியாதது."
பேச்சு 4 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்

**குறுநாடகம்** (சிங்களம்/தமிழ்)

நாடகம் 10 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்

போட்டிகள் பற்றிய மேலதிக விபரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் எந்தவொரு ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தனிப் பாடல் / பேச்சு / குறுநாடகப் போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள்
2010 ஜூலை மாதம் 12ம் திகதிக்கு முன்பும்
சித்திரம்/கட்டுரை/சிறுகதை போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள்
2010 ஜூலை மாதம் 30ம் திகதிக்கு முன்பும்
சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மாவட்ட மட்டத்திலான போட்டிகள் 2010, ஜூலை மாதம் 17ம் திகதி மாவட்ட நிலையங்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
போர்ஜி - 011-2661983, பிரியான் - 011-2661993

அனுசரணை :
DailyMirror

HNB




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெற் பயிர்ச்செய்கை கதை

**பண்டைய காலம் முதல் இன்று வரையிலான பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் நெற் பயிர்ச் செய்கை பிரதான இடம் வகிக்கின்றது. பண்டைய சமூக முறையும் நெற் பயிர்ச்செய்கையிலேயே தங்கியிருந்து வந்துள்ளது. இன்றும் இந்த நெல் விவசாயம் பிரதான பயிர்ச் செய்கை முறையாகவும் உணவுத் தேவையின் முக்கிய இடத்தை பூர்த்தி செய்வதாகவும் இருந்து வருகின்றது.**

இந்த மரபுரீதியான நெல் விவசாய முறை இன்று நவீன விவசாய முறையாக மாறியிருக்கின்றது. பயிர் வளர்ச்சியின் ஆரம்பகட்டம் முதல், அறுவடை வரையில் மரபு ரீதியான முறைகளுக்குப் பதிலாக நவீன தொழில்நுட்பம் கையாளப்பட்டு வருகின்றது. முன்னைய முறையில் கடைப்பிடிக்கப்பட்ட பயிரிடலில் அறுவடை கூடிய நெல்லினம் அறிமுகம் செய்யப்பட்டமை, இயற்கைப் பசளைக்குப் பதிலாக நவீன உரப் பயன்பாடு என்பன இந்த விவசாயத்தின் முக்கிய நவீன முறையாக அமைந்துள்ளது.

ஆரம்பகால மனிதன் வருடத்தில் ஒரு போகத்தில் மட்டும் நெற்செய்கை செய்தபோதும் இன்றைய காலப்பகுதியில் இரண்டு போகங்களிலும் நெற்செய்கை செய்யப்படுவதால், கூடுதல் அறுவடை பெறும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

## நிலத்தைப் பண்படுத்தல்

நெற்செய்கைக்குப் பின்வரும் வழிகளில் நிலம் பண்படுத்தப்படுகின்றது. அதன்மூலம் பல தேவைகளை அடைந்து கொள்வது முக்கிய நோக்கமாகும்.

- காபன் துணிக்கைகளை மண்ணுடன் கலக்கச் செய்தல்.
- களைகளை முறையாக ஒழித்தல்.
- மூலக, மூலகமல்லாத உர வகைகளை மண்ணுடன் கலத்தல்.
- வேர்கள் நன்கு விரிந்து வளர்வதற்கு ஏற்ப மண்ணை மென்மையாக்கல்.
- பயிர்ச்செய்கைக்கு ஏற்றதாக மண் மேற்பரப்பைப் பண்படுத்தல்.
- நீரைக் கட்டுப்படுத்தல்.
- ஈரலிப்பை ஏற்படுத்தும் வகையில் மண்ணைப் பண்படுத்தல் சேற்று நிலமாக நிலத்தைத் தயார்படுத்தும்போது கையாளப்படும் வழிகள்.

## ஆரம்ப நிலை பண்படுத்தல்

ஆரம்ப நிலையில் நிலத்தை தயார் செய்யும்போது 8-10 அங்குல ஆழத்திற்கு நிலம் மென்மையாக்கல் செய்யப்படுகின்றது. இதற்காக மரபு ரீதியான முறையில் கலப்பை இரும்பு கூர் கலப்பை, தட்டைக் கலப்பை என்பன பயன்படுத்தப்படுகின்றன. மண் வெட்டியால் கொத்திப் புரட்டுவதும் இலகுவாகின்றது. இவ்வாறு செய்யும்போது நிலத்திற்குகீழ் உள்ள கனமான மண் மேற்பரப்பிற்கு வந்து மென்மையாக்கப்படுகின்றது. இதனால், மண்வளம் பெற்றுப் பண்படுகின்றது. மண் இவ்வாறு பண்படுத்தப்பட்ட பின்னர் அதனோடு, இயற்கை உரவகைகள் சேர்க்கப்பட்டு, மண்ணுடன் கலக்கப்படுகின்றது. அதற்காக வைக்கோல், இலை குழை வகைகள் சேர்க்கப்படுகின்றன.

## இரண்டாம் நிலை உழுதல்

முதல் கட்ட மண் பண்படுத்தலுக்குப் பின் 10-14 நாட்களின் பின்னர் இரண்டாம் முறையாகவும் நிலம் பண்படுத்தப்படுகின்றது. இவ்வாறு பண்படுத்தப்படும்போது மூலகம் அல்லாத உரவகைகள் (இயற்கை உரம்) அல்லது சேதனப் பசளை வகை மண்ணுடன் கலக்கப்படுகின்றது.

## வரம்பு கட்டல்

இரண்டாம் கட்ட மண் பண்படுத்தலுக்கு முன்னர் வயலில் வரம்பில் உள்ள புல் மண்வெட்டியால் வலிக்கப்பட்டு வரம்பு, மண் வைக்கப்பட்டு புதியதாகத் தயார்படுத்தப்படும். இந்த செயற்பாடு இரண்டாம் கட்ட மண் பண்படுத்தலுக்குப் பின்னரும் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு வரம்பு தயார்படுத்தப்படுவதால் வயலில் நீரைத் தேக்கி வைத்தல் நடைபெறுகின்றது. நீர் துளைகளால் வடிந்து வெளியேறல் தடைப்படுகின்றது. வரம்பில் களைகள், வளர்வதும் தடைப்படுகின்றது.


## பதப்படுத்தல்

மண்ணைப் பண்படுத்தி உரக்கலவை சேர்த்து புரட்டப்பட்ட பின்னர் மண்கட்டிகள் கரையும் விதமாகவும் மண் குவியல் சமமாக மட்டப்படும் வகையிலும் மட்டப் பலகை மூலம் மண் பண்படுத்தப்படும். இவ்வாறு செய்யும்போது நெல் பயிரிடத் தூவும்போது இடைவெளி ஏற்படுவது தவிர்க்கப்படுகின்றது.

## வைக்கோல் இடல்

மண்ணைப் பண்படுத்துவதற்முன்னர் சேதன உரப்பயன்பாடாக வைக்கோல் இடப்படுகின்றது. வைக்கோல் மண்ணை வளமாக்க சிறந்த உரமாக மண்ணுக்குள் உறிஞ்சப்பட்டு மண்வளம் பெறுகின்றது.

சேற்றில் வைக்கோல் இடப்பட்டு அவை அழுகும்போது மண்ணுடன் கலப்பதால் இந்த வளப்படுத்தல் இடம்பெறுகின்றது. அழுகல் நிலை முதல் பண்படுத்தலின் பின்னர் சேதனப்பசளையிட்டு நீர் கட்டுதல் செய்யப்படுகின்றது. ஆயினும், வைக்கோல் இடும்போது வேறு வகையான நெல் வயலில் கலந்து, வேறுவகையான பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதும் அவசியமாகின்றது.



## பொருத்தமான நெல் வகையை தேர்ந்தெடுத்தல்

கூடுதலான அறுவடை கிடைக்கக் கூடிய நெல்லினத்தை விதைப்பது முக்கியமானதாகும். அதற்காக பல புதிய நெல்லினங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. பல்வேறு வகையான காலநிலை, சுவாத்திய தட்பவெப்ப நிலைக்கு ஒத்து வரக் கூடிய வகையில் பயிரிடக்கூடியதாக 36 வகையான நெல்லினங்கள் உள்ளன. நெல் ஆராய்ச்சி நிலையத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த 36 வகையான முதல் நெல்லினங்களில் முக்கியமான இனங்கள் பல உள்ளன.

## நெற் பயிர் அடர்த்தி

சிறப்பானதும் அதிகமானதுமான அறுவடைக்கு நெற்பயிர் செழித்து வளரவேண்டும். புதிய நெல்லினத்தின் சிறப்பம்சம் நெற்கதிர்கள் பெருகும் வண்ணம் நெல் பற்றையாகச் செழித்து அடர்த்தியாக வளர்வதாகும். அதனால், நெல்லினத்தின் தன்மைக்கு ஏற்ப போதிய இடைவெளி விட்டு நடும்போது கூடுதல் அறுவடையைப் பெறமுடியும்.

## தூவுதல் அல்லது நாற்று நடுதல்

தூவி விதைப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு விதை நெல் $2\text{-}2^{1/2}$ புசல் வரை தேவைப்படுகின்றது. ஆனால், நாற்றாகப் பிடுங்கி நடுவதற்கு ஏக்கர் ஒன்றுக்கு $1\text{-}1^{1/2}$ புசல் வரை விதை நெல் போதுமானது. ஒரு புசல் விதை நெல் விதைப்பதற்கு ஒரு ஏக்கர் நிலத்தில் 1/10 பங்கு அளவு பரப்பளவு நிலம் பயன்படுத்தப்பட வேண்டும். பிடுங்கி நடும்போது ஊழியர் செலவு அதிகம் என்பதால் தூவி விதைக்கும் முறை (விசிறி விதைத்தல்) பின்பற்றப்படுகின்றது. நீள் வரிசையில் 6 அங்குலம் (15 செ.மீ) இடைவெளியும் ஒரு நாற்றில் இருந்து மற்ற நாற்றுக்கு இடையில் 4 அங்குல (4 செ.மீ) இடைவெளியும் காணப்பட வேண்டும். நாற்று நடும்போது தேவைக்கு அதிகமான ஆழத்தில் நடுவது தவிர்க்கப்படவேண்டும்.



## போகத்தில் பயிரிடல்

குறிப்பிட்ட போகத்தில் பயிரிடுவதால் கூடுதல் அறுவடை சாத்தியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கயின்

திகதிக்கு இடைப்பட்ட காலமாகும். இக்காலப் பகுதியில் வயல் நிலம் பண்படுத்தப்பட்டு தயார் படுத்தப் பட்டவுடன் ஒக்டோபர் இடைப்பகுதியில் நாற்று (தவான்) தயார்படுத்தப்பட்டு நொவெம்பர் ஆரம்பத்தில் வேளாண்மை செய்கை பண்ணப்படும்.

1.1 : நான்கு மாதகால அறுவடை நெல்லுக்கு வயல் நிலம் ஒக்டோபர் 10-30 ஆம் திகதிக்குள் தயார்படுத்தப்பட்டு நொவெம்பர் ஆரம்பத்தில் நாற்று நடப்படும்.

**2. குறைந்த பருவ வயது நெல்**


2.1 : 3 1/2 மாத கால அறுவடை நெல் பயிரிட ஒக்டோபர் 25, நொவெம்பர் 15 ஆம் திகதிக்கிடையில் உழுது பண்படுத்தல் நடைபெறும். நொவெம்பர் நடுப்பகுதியில் நெற் பயிர் நடப்படும்.

2:1.1: மூன்று மாதகால அறுவடை நெல் இதற்காக நொவெம்பர் 10-30 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதிகளில் நிலம் பண்படுத்தல் நடைபெறும்.

முக்கியமான இரண்டு காரணிகளின் அடிப்படையில் இவ்வாறு செய்யப்படுகின்றது.

1. குறிப்பிட்ட போகச் செய்கை.
2. விவசாயிகள் அனைவரும் ஒரே முறையில் பயிரிடலில் ஈடுபடுதல்.

இந்த விடயத்தில் குறிப்பிட்ட போகத்தில் போதிய



மழைவீழ்ச்சி, சூரிய ஒளி என்பன கவனத்தில் கொள்ளப்பட்டு குறிப்பிட்ட போகத்தில் நெற்செய்கை செய்யும்போது முறையான பாதுகாப்புடன் நல்ல அறுவடையைப் பெறலாம்.



## பெரும் போகத்திற்கு பொருத்தமான செய்கைக் காலம்

**1. அதிக கால பருவ நெல்**

4 1/2 மாத கால அறுவடை நெல் இப்போகத்திற்காக தேர்ந்தெடுக்கப்படும். பண்படுத்தல் காலம் செப்டெம்பர் 25 முதல் ஒக்டோபர் 15 ஆம் நாற்று நடல் டிசம்பர் நடுப்பகுதியில் நடைபெறும். அறுவடைக்காலம் பெப்ரவரி 15-மார்ச் 15 இடைப்பட்ட காலமாகும்.

## சிறுபோக ஏற்பாடு

**அதிக கால நெல்**

1. 4 1/2 மாதகால நெல் பயிரிட வயலைப் பண்படுத்தல் மார்ச் 25 முதல், ஏப்ரல் 15 ஆம் திகதி வரை நடைபெறும். நெல் விதைத்தல் ஏப்ரல் 15-30 இடைப்பட்ட காலத்தில் நடைபெற்று நாற்றுக்களைப் பிடுங்கி நடல் ஏப்ரல் கடைசிப் பகுதியில் நடைபெறும்.

1.1 : 4 மாதகால நெல் இந்த வகை நெல் பயிரிட ஏப்ரல் 10-30 வரையில் வயல் நிலம் தயார்படுத்தல் நடைபெறும். தவான் இடல் ஏப்ரல் 30 முதல், மே 15 வரை நடைபெறும். நாற்றுக்களைப் பிடுங்கி நடல் மே மாதக் கடைசியில் நடைபெறும்.

**குறைந்த வயது நெல்**

1. 3 1/2 மாதகால நெல் பயிரிட நிலம் தயார்படுத்தல், காலம் ஏப்ரல் 25 முதல் மே 15 வரையாகும். நெல் விதைப்பு, மே 15 மே 31 வரையாகும். நாற்றுக்களைப் பிடுங்கி நடல் மே மாதக் கடைசியில் நடைபெறும்.

| நெல் இனம் மூன்று மாதம் | 1 ஏக்கரில் பெறக்கூடிய அறுவடை அளவு (புசல்) | முக்கிய விடயம் |
|---|---|---|
| B.G 300 | 100-120 | வெள்ளை நிற இடைநிலை நீளமான அரிசி. இலைக்காமாலை நோய்த்தாக்கு பிடிக்கக்கூடியது. |
| A.T 303 | 100-120 | சிவப்பு தவிட்டரிசி-அம்பாந்தொட்டை மாவட்டத்திற்குப் பொருத்தமானது. |
| B.G 304 | 100-120 | வெள்ளை அகலமான அரிசி ஈத்தெண்டு, ஊதாப்புள்ளி நோய்க்கு ஈடுகொடுக்கக்கூடியது. |
| B.G 305 | 110-130 | வெள்ளை நீண்ட அரிசி. இலைக் கருகல், இலைக்காமாலை, ஈ தாக்கத்திற்கு ஈடுகொடுக்கக்கூடியது. |
| B.W 272-6B | 60-70 | சிறிய சிவப்பு நிற அரிசி. இரும்புச்சத்து நச்சுத்தன்மையாதலைத் தடுக்கும். |
| $3^{1/2}$ மாத நெல்லினம் | | |
| B.G 94-1 | 150 | புசல் வெள்ளை நீண்ட அரிசி. பயன்படுத்தப்படும் உரத்திற்கு ஏற்ற அறுவடை. |
| B.G 267-3 | 70-80 | நீள் அமைப்பு அரிசி. கீழ் நாட்டு ஈரவலய வயல் நிலங்களுக்கு மிகப் பொருத்தமானது. |
| B.G 350 | 150 | சிவப்பு அரிசி. இலைச்சுருள் நோய்க்கு தாக்குப் பிடிக்கக்கூடியது. |
| B.W 351 | 150 | சிவப்பு அரிசி. இலைப் பங்கஸ் தாக்கத்திற்கு தாக்குப் பிடிக்கக்கூடியது. |
| $4-4^{1/2}$ மாதம் | | |
| B.G 379-2 | 150 | வெள்ளை இடைநிலை அரிசி. கீடா தாக்கத்திற்கு முகம்கொடுக்கக் கூடியது. இடும் பசளைக்கு ஏற்ப செழித்து வளரும். நல்ல அறுவடை தரும். |
| B.G 450 | 140 | வெள்ளைச் சம்பா. ஒட்டு ஈ தாக்கத்திற்கு முகம் கொடுக்கக்கூடியது. இரும்புச்சத்து நச்சுத்தன்மை ஆவதைத் தடுக்கும். |
| B.G 400 | 120 | சிவப்பு அரிசி. ஈரப்பதனுக்கு நன்கு தாக்குப்பிடிக்கும். |
| A.T 401 | 150 | ஈரப்பதனுக்கு நன்கு தாக்குப்பிடிக்கும். |
| பி.ஜி (B.G) என்பது பத்தலேகொட நெல் ஆராய்ச்சி நிலையத்தைக் குறிக்கும். இந்த நெல் ஆராய்ச்சி நிலையத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதைக் குறிக்க பி.ஜி குறியீடு பயன்படுத்தப்படுகின்றது. | | |

1.1 3 மாதகால நெல் இவ்வகை நெல்லினத்திற்கு நிலம் தயார்படுத்தல் மே 10-31 ஆம் திகதி வரை நடைபெறும். நெல் நாற்று நடல் மே 31 முதல், ஜூன் 15 வரை நடைபெறும். நாற்றுக்களைப் பிடுங்கி நடல் ஜூன் 15-30 ஆம் திகதி வரை நடைபெறும். சிறுபோக அறுவடை ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கிடையில் நடைபெறும்.

## மண்வளமும் சிறந்த நெல் அறுவடையும்

சிறப்பான செழுமையும் வளமும் உள்ள நிலத்தில் இருந்து உயர்வானதும் நல்ல தரத்திலுமான அறுவடையைப் பெறமுடியும். நெல் நன்கு செழித்து வளரும். இத்தகைய செழுமைமிக்க நிலத்தில் வளரும் வேளாண்மையில் பின்வரும் தன்மைகள் காணப்படும்.

* நெற்பயிர் அடர்த்தியாக செழித்து வளர்ந்து காணப்படுதல்.
* அதிக நெல்மணிகளை நெற்கதிர்களைக் கொண்டிருத்தல்.
* தாழ்வாக நெற்பயிர் சரிந்து விழாத தன்மை.
* நோய்களில் இருந்து தாக்குப்பிடிக்கும் சக்தி என்பன காணப்படுகின்றன.

தற்போது இருபோக செய்கை பண்ணப்பட்டாலும் ஆரம்ப காலத்தில் ஒருபோக செய்கை மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு செய்தபோது மண்வளம் குன்றாமல் இருப்பது உறுதி செய்யப்பட்டதோடு, செழுமை மிக்க நிலத்தில் நல்ல அறுவடை செய்யவே அவ்வாறான வழமையைப் பின்பற்றினர். அத்தகைய நிலத்திற்கு அதிக உரப்பயன்பாடு தேவைப்படவில்லை.

இரண்டு போகங்களிலும் நெற் செய்கை பண்ணப்படும்போது மண்ணின் செழுமை குறைவடைவதோடு, வளமும் குன்றும் நிலை ஏற்படுகின்றது. இதனால், ரசாயனப் பதார்த்தம் கலந்த உர வகைகளைப் பயன்படுத்த வேண்டியேற்படுகின்றது. ஆனாலும், அதிக விளைச்சலைப் பெற தொடர்ச்சியாக ரசாயனப் பதார்த்த உரவகைகளைப் பயன்படுத்தும்போது மண்வளம் குன்றும் நிலை ஏற்படுகின்றது.

அதிகமான வயல் நிலங்களில் குறைவான விளைச்சலுக்கு இதுவே காரணமாகும். இந்த நிலையில் இருந்து மீட்சி பெற ரசாயன மற்றும் காபன் பசளைகளை முறையாகப் பயன்படுத்தவேண்டும்.

**அமீர் ஹுஸைசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைநகரின் ஒருபக்கத் தோற்றம்
தேசிய சின்னம்

# கினியா-பிசோ

**அரசு:** ஜனாதிபதி தலைமையிலான குடியரசு.

**சுதந்திரம்:** போர்த்துக்கல்லிடமிருந்து சுதந்திர பிரகடனம்- 1973, செப்டெம்பர் 24; நிறைவேற்றம்-1974, செப்டெம்பர் 10.

**தேசிய பெயர்:** ரிபப்ளிகா டா கினி-பிசோ (Republic of Guinea-Bissau)

**தேசிய விடுமுறை:** சுதந்திர தினமாகிய செப்டெம்பர் 24.







**ஜனாதிபதி** (2009): மெலம் பகாய் சென்ஹா.

**பிரதமர்** (2008): கார்லோஸ் கோமஸ் ஜூனியர்.


ஜனாதிபதி


பிரதமர்

## புவியியல்

செனகல் நாட்டை அண்டை நாடாகக்கொண்ட கினியா-பிசோ, ஒரு மேற்கு ஆபிரிக்க நாடாகும். நாட்டின் கரையோரப் பகுதி நெடுகிலும் சதுப்பு நிலங்களே காணப்படுகின்றன. தவிர, அடர்ந்த மழைக்காடுகளும் உலர்நில தீவுக்கூட்டங்களையும் கொண்டது. ஏறக்குறைய 25 தீவுகள் நிலப்பரப்பிற்கு வெளியே காணப்படுகின்றன. மேற்கு ஆபிரிக்க நதியாகிய கெபா கினியாவில் உற்பத்தியாகி, கினியா-பிசோ ஊடாக அட்லாண்டிக் சமுத்திரத்தில் சங்கமமாகின்றது. அது ஏறக்குறைய 340 மைல் (550 கி.மீற்றர்) நீளத்தைக்கொண்டது.

**மொத்தப் பரப்பு:** 13,946 ச.மைல் (36,120 ச.கி.மீற்றர்)

**நிலப்பரப்பு:** 10,811 ச.மைல் (28,000 ச.கி.மீற்றர்)

**தலைநகரமும் பெரிய நகரமும்:** பிசோ.

**உயர்சிகரம்:** பெயரிடப்படாத மலை-984 அடி (300 மீற்றர்); **தாழ் மையம்:** அட்லாண்டிக் சமுத்திரம்.

**சனத்தொகை** (2009): 1,533,964.

**நாணயம்:** CFA ஃப்ரேங்.

**இணையத்தளக் குறியீடு:** .gw

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 245

**மொழிகள்:** போர்த்துக்கேயம் (உத்தியோகபூர்வம்), க்ரியலோ, ஆபிரிக்க மொழிகள்.

**இனங்கள்:** ஆபிரிக்கர் 99% (பெலன்டா 30%, ஃபுலா 20%, மஞ்சகா 14, மண்டிங்கா 13%, பபெல் 7%), ஐரோப்பியர் மற்றும் முலாட்டோ இனத்தினர் 1% இலும் குறைவாகவே உள்ளனர்.

**சமயங்கள்:** உள்ளூர் நம்பிக்கைகள் 50%, இஸ்லாம் 45%, கிறிஸ்தவம் 5%.

**எழுத்தறிவு** (2003): 42.4%.

**தேசிய சின்னங்கள்:** மரம், மலர், பறவை, மிருகம், விளையாட்டு என எதுவும் பிரகடனப்படுத்தப்படவில்லை.

**தேசிய கீதம்**

Sol, suor e o verde e mar,
Seculos de dor e esperanea:
Esta e a terra dos nossos ayos!
Fruto das nossas maos,.... என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

இன்றளவில் கினியா-பிசோ என அழைக்கப்படும் பகுதி ஒரு காலத்தில் 'காபு ராச்சியம்' என அழைக்கப்பட்டது. அது மாலி பேரரசின் ஒரு பகுதியாகவும் விளங்கியது. 1564 இற்கு பின்னர் காபு ராச்சியம் சுய அதிகாரமுள்ள ராச்சியமாகி 1867 வரை நீடித்தது. போர்த்துக்கேய நாடுகாண் பயணியான நியூனோ டிரிஸ்டாயோ, 1446 இல் கினியா-பிசோவை அடைந்தான். அதனைத் தொடர்ந்து போர்த்துக்கேய காலனியான கேப் வேர்ட் தீவுகளுடன் இணைந்து இப்பிராந்தியம் வர்த்தக மையமாகத் திகழ்ந்ததுடன், பின்னர் போர்த்துக்கேயரின் அடிமை வியாபாரத்தளமாகவும் மாறியது. 1879 இல் ஏனைய தீவுகளுடனான தொடர்பு அறுந்தது.

கினியா-பிசோவினதும் மற்றொரு போர்த்துக்கேய காலனியாகிய கேப் வேர்ட் நாட்டினதும் சுதந்திரத்திற்காக 1956 முதல் ஆபிரிக்க தேசிய கட்சி தேசிய போராட்டமொன்றை ஆரம்பித்தது. 1974 இல் அந்நிய ஆட்சிக்கெதிரான இந்த போராட்டக் குழுவினர், நாட்டின் பெரும்பாலான பகுதிகளை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தனர். அதனை அடுத்து, 1974 ஓகஸ்ட் மாதம் போர்த்துக்கேய அரசு சுதந்திர பிரகடனத்திற்கான கையெழுத்திட்டு சுதந்திரத்தை வழங்கியது. புதிய குடியரசு தனது பெயரை 'கினியா-பிசோ' என மாற்றிக்கொண்டது.

## காலநிலை

கினியா-பிசோ வெப்பமான காலநிலையை இரு பருவங்களில் அனுபவிக்கின்ற ஒரு நாடாகும். மழைக்காலம் ஜூன் முதல் நொவெம்பர் வரையாகும். ஓகஸ்ட் மாதத்தில் உச்ச அளவில் மழை பொழியும். உலர் பருவமானது டிசம்பர் முதல் மே வரை நிலவுகின்றது. ஏப்ரல்-மே வரை உச்ச வெப்பம் நிலவும். காலத்திற்குக் காலம் சஹாரா பாலைவனத்தில் இருந்து வீசும் வெப்பக்காற்று நாட்டினுள் தாக்கத்தை ஏற்படுத்தும்.





## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2005): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்-10,200; செல்லிடத் தொலைபேசிகள் : 95,000. **வானொலி நிலையங்கள்** (2002): AM 1, FM4.

**இணையத்தளப் பாவனையாளர்கள்** (2006): 37,000.

## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்** (2002): மொத்தம் 3455 கி.மீ. (இதில் செப்பனிடப்பட்டவை -965 கி.மீ; செப்பனிடப்படாதவை 2490 கி.மீ) **நீர்வழிப் போக்குவரத்து:** குறிப்பிட்ட சில தூரம் வரை ஆறுகள் கப்பல் போக்குவரத்திற்கு ஏற்றதாக திகழ்கின்றன. அதனைத் தவிர்ந்த ஏனைய பகுதிகள் ஆழமற்றுக் காணப்படுகின்றன. **துறையும் துறைமுகங்களும்:** பிசோ, புபா, கெச்சு, ஃபாரிம். **விமான நிலையங்கள்** (2007): 27.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 8%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** தானியங்கள், பருத்தி, மரவகைகள், மீன். **தொழிலாளர் தொகை** (1999): 480,000 (இதில் விவசாயத்துறை 82%, கைத்தொழில் மற்றும் சேவைகள் 18%). **கைத்தொழில்கள்:** விவசாய உற்பத்திகள், பியர், மென்பானம். **ஏற்றுமதிகள்** (2006): முந்திரிகை, நிலக்கடலை, விலை உயர் தளபாடங்கள். **இறக்குமதிகள்** (2006): உணவுப் பொருட்கள், இயந்திரங்கள், போக்குவரத்து சாதனங்களும் உபகரணங்களும், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2006): பாகிஸ்தான், நைஜீரியா, இத்தாலி, செனகல், போர்த்துக்கல்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....


✦ சென்ட்ரோ ஆர்டிஸ்டிகோ ஜூவேனில் சந்தை ✦ மெர்காடோ சென்ட்ரல் சந்தை ✦ Museu Nacional கலாபவனம் ✦ ஆபிரிக்க கலைப்படைப்பு நூதனசாலை ✦ Bijagos Archipelago தீவுக்கூட்டம் ✦ கென்டானெஸ் தேசிய வனவியல் பூங்கா ✦ River Zoo farm (விலங்கியல்சாலை) ✦ கல்டின்ஹோ நீர்வீழ்ச்சி.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலக்கிய உலகில் ஒரு யுக புருஷர் மார்ட்டின் விக்கிரமசிங்க

**மார்ட்டின் விக்கிரமசிங்க மறைந்து 34 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இவரது நினைவு தினம் இம்மாதம் 23 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளதையொட்டி இவ்வாக்கம் பிரசுரிக்கப்படுகின்றது**





சிங்கள இலக்கியத்தில் ஒரு புதிய சம்பிரதாயத்தை உருவாக்கி, சமுதாய இலக்கியமாக மாற்றியவர் மார்ட்டின் விக்கிரமசிங்க அவர்களே, சாதாரண மனிதனைப் பற்றி, சாதாரண மொழியில் இலக்கியம் படைத்து, புதிய சம்பிரதாயத்தை ஆரம்பித்து வைத்த இவர் 1890 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி இலங்கையின் தென் பிராந்தியத்தின் கொக்கலையில் உள்ள ஒரு கிராமத்தில் பிறந்தார். இவர் தனது 24 ஆவது வயதில் முதலாவது நாவலை வெளியிட்டார்.

இவரது இளமைக் காலம் இவரது சிறிய கிராமத்திலேயே கழிந்தது. அப்பிரதேசம் காடும் காடடர்ந்த பிரதேசமாகவும், நதியும் நதிக்கரைச் சூழலும் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் கடலும் கடற்கரையும் தூரத்தே வயல்வெளியும் வானமும் பற்றையும் பற்றைக்காடும் அதில் செடி கொடிகளும் உயர்ந்து, வளர்ந்த மரங்களும் நிறைந்த ஒரு ரம்யமான சூழலில் காணப் பட்டது. ஆதலால், இந்தக் கிராமத்தின் சூழல் இவரது அநேகமான சிறுகதைகளிலும் நாவல்களிலும் பிரதிபலிப்பதைக் காணலாம்.

இவர் மறைந்த தருவாயில் தினகரன் பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றில் என்.எம்.அமீன் குறிப்பிட்டுள்ளதாவது;

தமது சொந்தக் கிராமத்தில் தாய்மொழிக் கல்வியைப் பெற்ற மார்ட்டின் விக்கிரமசிங்க காலி உனவடுன பொனவிஸ்டா வித்தியாலயத்தில் ஆங்கிலக் கல்வியைப் பெற்றார். சிறு வயதிலேயே தனது தந்தையை இழந்த இவர், வளரும் பருவம் வரை தெற்கின் கடற்கரையோர கிராமப் புறத்திலேயே வாழ்ந்தார். பின்னர் கொழும்பில் உள்ள ஒரு புத்தகசாலையில் லிகிதராகப் பணிபுரிந்தார். அவ்வேளைகளில், ஆங்கிலப் புத்தகங்களை அதிகமாக வாசித்து பத்திரிகைகளுக்கு கட்டுரைகளை எழுதினார். இவ்வாறான முயற்சிகளின் மூலமே பிற்காலத்தில் இலக்கியத்தை புதிய மோஸ்தரில் அமைத்து அதன் வழியில் சென்றவர் மார்ட்டின் விக்கிரமசிங்க. இவருடைய ஆக்கங்கள் பல இவருக்கு அதிகமான செல்வாக்கினைத் தேடிக் கொடுத்தன. 1930 இல் இவர் எழுதிய வரலாற்று நாவலான ரோஹினியும் அவற்றில் ஒன்றே. பலமுறை பிரசுரிக்கப்பட்டு, விற்பனையான இந்த நாவல் 'துடுகெமுனு' கால வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டது. 'கம்பெரலிய' என்ற இவரது ஆக்கம் இலக்கியத் திறமையின் உச்சக்கட்டத்தினை மிகத்துல்லியமாகக் காட்டுகின்றது.



அத்துடன், இவர் சோசலிச கொள்கையை மிக விரிவாக ஆராய்ந்து பல ஆக்கங்களையும் வெளியிட்டுள்ளார். பரிணாமவாதத்தை சிங்கள மொழிக்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தியவரும் இவரே, தனியான நாவல் மட்டுமன்றி சிறுகதை, கவிதை, நாடகம், விமர்சனக் கட்டுரை ஆகிய அனைத்துத் துறைகளிலும் ஈடுபாடுடைய ஒரு பரிபூரண எழுத்தாளராக மார்ட்டின் விக்கிரமசிங்க திகழ்ந்தார்.

மேலும், பிறந்த இடத்தை, கிராமப்புறத்தை உயரிய முறையில் நேசிக்கும் ஏனையவர்களைவிட மார்ட்டின் விக்கிரமசிங்கவிடம் அதிகமா

தினமின, சிலுமின, லக்மின ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராக அவரால் வரமுடிந்தது.

அத்துடன், 1946 ஆம் ஆண்டு வரை தினமினவில் பணிபுரிந்து எழுத்துத்துறையில் பல சாதனைகளை நிலைநாட்டிய இவர், 1914 ஆம் ஆண்டு இவர் வெளியிட்ட 'லீலா' என்ற நாவலின் மூலம் தனது புதிய 'அசைவி' என்ற இயக்கத்தினை ஆரம்பித்தார். நாவல் இலக்கியத்தில் இவர் ஏற்படுத்திய புரட்சிகரமான மாற்றத்திற்காக வித்தியாலங்கார பல்கலைக் கழகம் இவருக்கு கலாநிதிப் பட்டத்தினை வழங்கியது.

கலாநிதிப் பட்டம் வழங்கும் நிகழ்வின்போது வித்தியாலங்கார பல்கலைக்கழக மொழியியல் பீடத்தலைவர் பின்வருமாறு உரையாற்றினார்; "சமகால

க் காணக்கூடியதாக இருந்தது. இதனை இவரது நூல்களின் பின்னணியிலிருந்து உணரலாம். அது மட்டுமன்றி, இவரது இறுதி விருப்பம்கூட தான் பிறந்த மண்ணிலேயே தமதுடல் அடக்கம் செய்யப் படவேண்டும் என்பதாகும். தமது இறுதிக்காலத்தில்கூட தனது பிறந்த ஊரான கொக்கலை சென்று வந்ததாக கூறப்பட்டுள்ளது. கிராமப்புற மக்களையும் கிராமப்புற சூழ்நிலைகளையும் அதிகமாக நேசித்த இந்த அதிசிறந்த எழுத்தாளரின் சிறுகதைத் தொகுப்பில் அதிகமானவை இன்றும் காலத்தால் அழியாத தன்மையுடையனவாக இருக்கின்றன. 'கஹனியக்' (பெண் ஒருத்தி) என்ற கதைத் தொகுதி 'வஹல்லு'(அடிமை) என்ற கதைத்தொகுதி போன்றவை மிகப் பிரசித்தம் வாய்ந்தவை.


அத்துடன், பல்வேறு உலக மொழிகளில் இவரது நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அந்தவகையில், ரஷ்ய, பிரெஞ்சு, சீன, ருமேனிய, பல்கேரிய, தமிழ் ஆகிய மொழிகளில் இவருடைய நாவல்கள், சிறுகதைகள் மொழிபெயர்க்கப்பட்டு உலகின் பல பகுதிகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன.


1925 ஆம் ஆண்டு மார்ட்டின் விக்கிரமசிங்க அவர்கள் சதபுவே பலகே பிரேமா விக்கிரமசிங்கா என்பவரை திருமணம் செய்துகொண்டார். தனது கணவராகிய மார்ட்டின் விக்கிரமசிங்க தலைசிறந்த எழுத்தாளராக வருவதில் திருமதி விக்கிரமசிங்கவின் பணியும் அளப்பரியது. இவர்களுக்கு மூன்று பெண் மக்களும் மூன்று ஆண் மக்களும் இருக்கின்றனர். ஆறு பேருமே பல்கலைக்கழகப் பட்டதாரிகளாவார்கள்.

எழுத்தாளர் எச்.எம்.பி முகைதீன் 01.08.1976 ஆம் ஆண்டு தினகரன் வாரமஞ்சரியில் எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளதாவது;

இவரது அதிமுக்கிய, இறுதியான நூல் ஸ்ரீபவத்தரன ஆகும். புத்த பெருமானின் வாழ்க்கை வரலாற்றை ஒரு புதிய கண்ணோட்டத்தில் அவர் இந்த நூலில் எழுதியுள்ளார். சித்தார்த்த குமாரன், புத்தராகும் வரையிலான வரலாற்றுக் காலத்தை குறிப்பிட்டபோது, புத்தரைச் சித்தார்த்த குமாரரின் கோலத்தில் நிறுத்தி பக்திபூர்வமாக இல்லாது, மதிப்புக் குறைவாக எழுதிவிட்டார் என்றும் புத்தரை இழிவுபடுத்திவிட்டார் என்றும் பலர் நாடெங்கும் சரமாரியான விமர்சனங்களை எழுதினர். இந்த நூலைச் சட்டவிரோதமாக்கக் கோரிக் கூட்டங்கள்கூட நடத்தினர். பயமுறுத்தல்கள், எச்சரிக்கைக் கடிதங்கள், தந்திகள் பறந்தன. ஆனால், மார்ட்டின் விக்கிரமசிங்கவின் உறுதி, எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. அத்தனை எதிர்ப்புக்களையும் சமாளித்தார். தன் கைப்பட எழுதிய ஒவ்வோர் எழுத்துக்கும் பூரண பொறுப்பேற்று, விளக்கமும் தந்தார். இறுதியில் மகோன்னத வெற்றியையும் பெற்றார். அவரது வெற்றி எழுத்தாளர் ஒவ்வொருவருக்கும் கிடைத்த மகத்தான வெற்றியாகும்.

'ஸ்ரீபவத்தரன' மார்ட்டின் விக்கிரமசிங்கவின் லட்சியநூல் எனலாம். தனது இலக்கியங்களின் கதாபாத்திரங்களுக்கெல்லாம் தலைமைக் கதாபாத்திரமாக தனது கதாபாத்திரங்கள் அனைத்தையும் கூட்டுமொத்தமாக்கிய ஒரு சின்னமாக, சித்தார்த்த குமாரனை மார்ட்டின் விக்கிரமசிங்க இந்த நூலில் மிக அற்புதமாக எடுத்துக்காட்டியுள்ளார்.





மார்ட்டின் விக்கிரமசிங்கவின் பல நூல்கள் ஆங்கிலத்திலும் பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட அளவுக்கு தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. தனது எழுத்துத்துறைக்கு மேலதிகமாக இவர் தத்துவவியலாளராக, கலைஞராக, சமூகவியல் ஆய்வாளராக எனப் பல தளங்களில் கால் பதித்துள்ளார். இவர் 60 ஆண்டுகளாக சேகரித்து தனது சொந்த வாசிகசாலையில் வைத்திருந்த சுமார் 5000 அபூர்வ நூல்கள் மார்ட்டின் விக்கிரமசிங்க அறக்கட்டளை நிறுவனத்தால் தேசிய நூலகம் மற்றும் ஆவணவாக்கல் சேவை நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. இவற்றை ஆய்வாளர்கள் பார்வையிடவும் உசாத்துணையாகப் பயன்படுத்தவும் முடியும்.

தற்போது மார்ட்டின் விக்கிரமசிங்க அறக்கட்டளை நிறுவனத்தினர் அவரது 94 நூல்களையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். மாத்தறைப் பிரதேசத்தில் கொக்கலையில் அமைந்துள்ள இவரது பிறந்த இல்லம் 'கிராமியக் கலை அரும்பொருட்காட்சி' நிலையமாக அமைக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைக்காக திறந்து விடப்பட்டுள்ளது.


**இரா.சடகோபன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் I (கடந்த வாரத் தொடர்ச்சி....)

சுட்டெண்: ..............................  நேரம்: 45 நிமிடங்கள்

(24) A- விளையாட்டு, B - கால்பந்து, C - கரப்பந்து ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பினை சரியாகக் காட்டும் உரு எது?





(25) வீதி ஓரத்தில் 9 மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளன. இரு மின்கம்பங்களுக்கு இடையிலான தூரம் 20m ஆகும். முதலாவது மின்கம்பத்திலிருந்து ஐந்தாவது மின்கம்பம் வரையிலான தூரம் எத்தனை மீற்றர் எனத் தெரிவு செய்க.

(1) 180m  (2) 100m  (3) 80m

(26) 5 பசுக்கள் 5 சாக்குப் புல்லை 5 நாட்களில் சாப்பிட்டு முடிக்குமாயின், ஒரு பசு 5 சாக்குப் புல்லை சாப்பிட்டு முடிப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?

(1) 5 நாட்கள்  (2) 25 நாட்கள்  (3) 1 நாள்

(27) முதல் மூன்று உருக்களையும் அவதானித்து வெற்றிடத்தில் வரவேண்டிய நான்காவது உருவைத் தெரிவு செய்க.



(1)  (2)  (3)

(28) 20m நீளமுடைய சதுரவடிவான காணி ஒன்றிற்கு 5m இடைவெளியில் வேலிக்கட்டைகள் நடப்பட்டுள்ளன. அக்காணியைச் சுற்றி வேலி அடைப்பதற்கு எத்தனை வேலிக்கட்டைகள் தேவை?

(1) 20  (2) 16  (3) 96

★ *29 ஆம் 30 ஆம் வினாக்களில் முதற்கூட்டில் உள்ள இரண்டு எண்களுக்குப் பதிலாக சரியான எண்ணைக்கொண்ட கூட்டைத்தெரிவு செய்து, அதன்கீழ்க் கோடிடுக.*

(29) [60×2] + 50-170  (1) [40×3]  (2) [10×6]  (3) [30×5]

(30) [XV-IV] + VI=XVII  (1) [X+V]  (2) [VII+V]  (3) [VI+V]

(31) குமாரிலும் பார்க்க லவன் நிறை கூடியவன். குமாரும் பிரமனும் சம நிறையுள்ளவர்கள். பிரமனிலும் பார்க்க கஜன் நிறை குறைந்தவன். இங்கு நிறை கூடியவர் யார்?

(1) பிரமன்  (2) கஜன்  (3) லவன்

(32) கிராமம் ஒன்றில் அதிகமாகக் காணப்படுபவை எவை?

(1) குளங்கள்  (2) வீதிகள்  (3) வீடுகள்

(33) கஜீவன் பாடசாலை நோக்கிச் செல்லும்போது அவனது நிழல் வலது பக்கமாக விழுவதைக் காணக்கூடியதாக இருந்தது. அவ்வாறெனின், அவன் எத்திசை நோக்கிச் சென்றான்?

(1) கிழக்கு  (2) மேற்கு  (3) தெற்கு

(34) பின்வரும் பந்தியில் ஒரு பகுதி வெட்டி நீக்கப்பட்டுள்ளது. வெட்டி நீக்கப்பட்ட பகுதியைத் தெரிவு செய்க.

பேராதனையிலிருந்து கண்டி மாநகருக்குச் சென்றோம். இயற்கை எழிலோடு சேர்ந்த [   ] அழகிய நகரம் அது. பூத்துக் குலுங்கும் மரங்களும் தெப்பக் குளமும் அருகே தலதா [   ] கண்டி மாநகரைத் தேவலோகம் போலத் திகழச் செய்தன. எல்லாவற்றையும் [   ] களித்தோம்.

(1) ஓர் / மாளிகையின் தங்கக்கூரையும் / கண் குளிரக் கண்டு

(2) ஒரு / மாளிகையின் தங்கக்கூரையும் / மனம் குளிரக் கண்டு

(3) ஒரு / மாளிகையின் வீட்டுக்கூரையும் / கண் குளிரக் கண்டு

★ *35 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.*

(35) புதிரில் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து, அதனை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

இது வீட்டுப் பாவனைப்பொருள். முதலாம் எழுத்து கண்ணில் உண்டு; காதில் இல்லை. இரண்டாம் எழுத்து பத்தில் உண்டு; இருபதில் இல்லை. மூன்றாம் எழுத்து திங்களில் உண்டு; செவ்வாயில் இல்லை. அது என்ன?

..................................................





(36) அடைப்புக்குள் தரப்புட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி கீழே தரப்பட்டுள்ள கோலத்தில் எழுதுக.


| டில்லி, வங்கி, குஞ்சு விறகு, கிழவி, சுண்டி |
|---|

✱ வங்கி → கிழவி → விறகு → .......... → .......... → ..........

(37) உருவில் காட்டப்பட்டுள்ள பாதை வழியே குமார் A என்ற இடத்தில் இருந்து நடந்து பாடசாலையை அடைந்தான். அவன் பாடசாலையை அடையும் வரையிலும் எத்தனை தடவைகள் வலப்பக்கமாகத் திரும்பினான்?





..................................................

(38) 

தரப்பட்ட உருவை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சதுரமுகியின் எண்ணிக்கை யாது?

..................................................

(39) பின்வரும் படங்களில் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ஒழுங்கைச் சரியாகக் காட்டுவதற்கு அவற்றின்கீழ் 1, 2, 3, 4, 5 ஆகிய எண்களை எழுதுக.



(..............)  (..............)  (..............)  (..............)  (..............)

(40) பல்வேறு நிறங்கள் தீட்டப்பட்ட மரச் சதுரமுகி ஒன்றின் இரு நிலைகள் கீழே காட்டப்பட்டிருக்கின்றன.




இச்சதுரமுகியில் நீல நிறம் பூசப்பட்ட பக்கத்திற்கு எதிரான பக்கத்தின் நிறம் யாது?

..................................................

## வினாத்தாள் I இன் விடைகள்

*(ஜூலை 07, 14 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | | |
|---|---|---|---|---|
| (01) 3 | (02) 2 | (03) 2 | (04) 3 | (05) 2 |
| (06) 2 | (07) 3 | (08) 2 | (09) 2 | (10) 3 |
| (11) 2 | (12) 2 | (13) 3 | (14) 2 | (15) 2 |
| (16) 2 | (17) 2 | (18) 2 | (19) 2 | (20) 3 |
| (21) 3 | (22) 1 | (23) 2 | (24) 3 | (25) 3 |
| (26) 2 | (27) 3 | (28) 2 | (29) 1 | (30) 3 |
| (31) 3 | (32) 3 | (33) 3 | (34) 1 | (35) கத்தி |

(36) குஞ்சு → சுண்டி → டில்லி  (37) 3 தடவைகள்

(38) 26  (39) 2-4-1-3-5  (40) சிவப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியை விழுங்கவுள்ள சூரியன்



'இன்னும் 760 கோடி ஆண்டுகளில் பூமி என்ற கிரகம் இருக்காது. அதை சூரியன் விழுங்கிவிடும்' என வானியல் நிபுணர்கள் சிலர் கணித்துள்ளனர். இங்கிலாந்தின் சசெக்ஸ் பல்கலைக்கழகத்தின் வானியல் பிரிவைச் சேர்ந்த கலாநிதி ரொபர்ட் ஸ்மித் தலைமையிலான நிபுணர் குழுவினர் மேற்கொண்ட ஆய்வொன்றின் முடிவே இவ்வாறு தெரிவிக்கின்றது.

இதுகுறித்து ஸ்மித் கருத்துத் தெரிவிக்கையில்; ''சூரியன் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகிறது. இந்நிலை நீடித்தால், இன்னும் 760 கோடி ஆண்டுகளில் அது பூமியை விழுங்கி விடும். சூரியனின் வெப்பம் காரணமாக பூமியில் எதுவும் நிலைத்திருக்காது. அனைத்தும் சாம்பலாகி விடும். சூரியனின் வெப்பத்தால் கடல்கள் அனைத்தும் ஆவியாகி முற்றிலும் வற்றிப்போய்விடும்'' என்றார்.

இதைத் தவிர்க்கமுடியாதா?, இந்த ஆபத்திலிருந்து பூமியைக் காப்பாற்ற முடியாதா? என்று கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஸ்மித் பதிலளிக்கையில்; ''இதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது. விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் ஒரு பெரிய விண் கல்லை பூமியின் சுற்றுப் பாதைக்கு இழுத்து வந்து, அதனுடன் பூமியை மோத விட வேண்டும். இவ்வாறு மோதச் செய்தால், நமது புவியின் சுற்றுப்பாதை மாறி வேறு பாதைக்கு நாம் வீசப்படுவோம். அவ்வாறு செய்தால்தான் சூரியனின் கோரப் பிடியிலிருந்து பூமியை மனித இனம் காப்பாற்றலாம்'' என்றார்.

எனினும், இது சாத்தியப்படக்கூடிய விடயமா? என பலரும் கருதுகின்றனர். ஆனால், இன்னும் சில நூற்றாண்டுகளில் இவ்வாறான ஒரு மோதலை ஏற்படுத்தக்கூடிய தொழில்நுட்பத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கும் வாய்ப்புள்ளது. எனவே, பூமியைக் காப்பாற்றலாம் என்ற நம்பிக்கையுடன் நாம் இருக்கலாம் என்று ஸ்மித் மேலும் கூறியுள்ளார்.

இதுதவிர, இந்நிகழ்வு இடம்பெறுவதற்குள் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள, உயிர் வாழ்க்கைக்கு ஏற்ற ஏனைய கிரகங்களுக்கு மனிதர்கள் இடம்பெயர்ந்து விடுவார்கள். எனவே, அதுபற்றிய கவலை தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சந்திர நீரிலிருந்து....



சந்திரனில் உள்ள பாறைகளில் ஒக்சிஜன் அடங்கியிருக்கின்றது. ஆக, வெப்பத்தையும் மின்சாரத்தையும் பயன்படுத்தி ஒக்சிஜனை எளிதாகப் பெற்றுவிடலாம் என்று கருதப்படுகின்றது. எனினும், சந்திரனில் நீர் அவ்வளவு எளிதாக கிடைத்துவிடாது. சந்திரனின் தென் துருவத்தில் பனிக்கட்டி வடிவத்திலேயே நீர் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த பனிப்பாறைகளை வெட்டித்தான் நீரை எடுக்கலாம். அதேவேளை, அந்த நீரை ஹைட்ரஜனாகவும் ஒக்சிஜனாகவும் பிரித்து எதிர்காலத்தில் சந்திரனுக்குச் செல்லவுள்ள ரொக்கெட்டுகளுக்குத் தேவையான எரிபொருளையும் பெற்றுக்கொள்ளலாம்.

ஒருவேளை, சந்திரனில் நீர் கிடைக்காமல்போனால்....? பூமியிலிருந்துதான் நீரைக்கொண்டு செல்ல வேண்டும். ஆனால், பூமியிலிருந்து சந்திரனுக்குக் கொண்டுசெல்லும் ஒவ்வொரு பவுண்ட் எடைக்கும் 50,000 டொலர்கள் செலவாகின்றது. ஒரு கெலன் நீரின் எடை எட்டு பவுண்ட்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு கெலன் நீரை பூமியிலிருந்து சந்திரனுக்கு கொண்டுசெல்ல ஆகும் செலவு 400,000 டொலர்கள். இந்த செலவினத்தை சற்றுக் குறைப்பதற்கான ஒரு வழியும் உண்டு. அதற்கு, திரவ ஹைட்ரஜனை பூமியிலிருந்து கொண்டு செல்ல வேண்டும். அதனுடன் சந்திரனின் பாறைகளில் இருக்கும் ஒக்சிஜனைக் கலந்து, நீரைத் தயாரித்துக் கொள்ளலாம். இந்த நீர் தயாரிக்கும் முயற்சியின்போது மின்சக்தியையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பது ஒரு மகிழ்ச்சியான செய்தி. இவையனைத்தும் சாத்தியமாகக்கூடிய செலவில் அமைந்தால், சந்திரனில் குடியேறுவது பற்றிய சிக்கல் ஓரளவு குறைந்துவிடும் என்பது விஞ்ஞானிகளின் கருத்தாக இருக்கின்றது.

## விண்வெளித் தகவல்கள்



### அதிக நட்சத்திரங்கள்



பூமியில் உள்ள மணற்துகள்களின் எண்ணிக்கையைவிட, வானில் அதிக நட்சத்திரங்கள் உள்ளன.

### வெள்ளி தவிர!



அனைத்துக் கோள்களும் எதிர் கடிகாரச் சுழற்சி முறையில் சுற்றுகின்றன. வெள்ளியைத் தவிர!

### லூனா - 3



நிலவின் (நம் பார்வைக்குத் தெரியாத) மறுபக்கத்தை முதன்முதலில் 'லூனா - 3' என்ற விண்கலம்தான் படம் எடுத்து அனுப்பியது. 1959 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இந்த விண்கலமானது ரஷ்யாவால் விண்வெளிக்கு அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


## ஷ்... உங்களுக்கு மட்டும்!

### தலைகீழ் நிறவரிசை



சில நேரங்களில் வானவில்லின் அருகில், சற்று மங்கிய நிலையில் இன்னொரு வானவில் இருக்கும். அதைப்பார்க்க நேரும்போது கூர்ந்து கவனியுங்கள். அதன் நிறங்கள் வானவில் நிற வரிசையின் தலைகீழ் வரிசையாக இருக்கும்.

## மேலே.... மேலே.... மேலே சென்றிடலாம்!



நாம் பூமியிலிருந்து மேலே செல்கிறோம் என்றால், எவ்வளவு உயரம் வரை செல்லலாம் என்று உங்களுக்குத் தெரியுமா? உண்மையிலேயே நாம் பூமியிலிருந்து மேலே... மேலே... மேலே சென்றுகொண்டே இருக்கலாம். அதற்கு எல்லையே கிடையாது. ஆனால், பூமியிலிருந்து மேலே செல்லச் செல்ல காற்றழுத்தமும் வெப்பநிலையும் ஈர்ப்புவிசையும் குறைந்துகொண்டே செல்லும். அதற்கான தயார் நிலையில் பாதுகாப்புக் கவசங்களை அணிந்துகொண்டு, அதற்கான ரொக்கெட்டில் பயணத்தை ஆரம்பித்தோமானால், எவ்வளவு உயரம் வேண்டுமானாலும் பயணிக்கலாம்!


தபால் மூல ஆங்கிலம் பாடநெறி.

ENGLISH COURSE BY POST

சரளமாக ஆங்கிலத்தில் எழுத, பேச, வாசிக்க பயிற்சி அளிக்கப்படும். பாடநெறி கட்டணம். 2490/-

வயது எல்லை இல்லை. Dip In English சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு உங்கள் பெயர், முகவரி, என்பவற்றை

SMS செய்யுங்கள். 0777- 806 606


E mail செய்யுங்கள் jei100@yahoo.com

அல்லது தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள்.

JEI INSTITUTE, P.O.BOX, 119 KANDY. 0814-92 91 93


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளிம



உலக வளிமண்டலவியல் திணைக்களத்தின் பொதுச் செயலாளர்



**சூறாவளி, வெள்ளப்பெருக்கு, வறட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களை மனிதனால் தடுக்க இயலாது. எனினும், இந்த அனர்த்தங்களை முன்பே அறிந்து, அவற்றில் இருந்து பாதுகாப்பினைப் பெறமுடியும். இதற்கு வளிமண்டலவியல் குறித்த தகவல்கள் எமக்கு பெரும் உதவி புரிகின்றன. அந்தவகையில், வளிமண்டலவியல் தகவல்கள் மற்றும் வளிமண்டலவியல் எதிர்வுகூறல்களை வெளியிட்டு மக்களுக்கு சேவையாற்றும் முகமாக சர்வதேச ரீதியிலும் உள்நாட்டு ரீதியிலும் செயற்பட்டு வரும் பல அமைப்புகள் உள்ளன.**

## உலக வளிமண்டலவியல் தினத்தின் ஆரம்பம்

சர்வதேச வளிமண்டலவியல் அமைப்பும் (IMO) ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் இணைந்து, 1950 மார்ச் 23 ஆம் திகதியில் உலக வளிமண்டலவியல் அமைப்பினை (World Meteorological Organization-WMO) ஸ்தாபித்தது. இதனை அனுஷ்டிக்கும் முகமாக,



ஐ.நா அமைப்பு மார்ச் 23 ஆம் திகதியை உலக வளிமண்டலவியல் தினமாக பிரகடனப்படுத்தியது. அத்துடன், இத்தினத்தினை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் உலக வளிமண்டலவியல் அமைப்பு விசேட நிகழ்ச்சிகளையும் நடாத்தி வருகின்றது.

## சர்வதேச வளிமண்டலவியல் அமைப்பு (IMO)

காலநிலை அடிக்கடி மாறும் தன்மைகொண்டது. இது ஒவ்வொரு பிராந்தியத்திலும் வெவ்வேறு விதமான தாக்கங்களை ஏற்படுத்தும். இவ்வாறான காரணங்களினால் சரியான, துல்லியமான காலநிலைத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் தேவையும் பல்வேறு பிராந்தியங்களில் இருந்து பெறப்பட்ட காலநிலைத் தரவுகளை ஒரே வேளையில் தொடர்புபடுத்தும் தேவையும் ஏற்பட்டது. அதனையிட்டு உலகின் பல்வேறு நாடுகள் இணைந்து 1873 இல் சர்வதேச வளிமண்டலவியல் அமைப்பினை (International Meteorological Organization-IMO) ஸ்தாபித்தது. இதன் தலைமையகம் ஒஸ்ட்ரியா நாட்டின் தலைநகர் வியன்னாவில் அமைந்துள்ளது.

## உலக வளிமண்டலவியல் அமைப்பு (WMO)

உலக வளிமண்டலவியல் அமைப்பின் தலைமையகம் சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ளது. இலங்கை உட்பட 189 நாடுகள் (2009 டிசம்பர் வரை) இவ்வமைப்பில் இணைந்துள்ளன. காலநிலை தொடர்பான சகல தரவுகள் மற்றும் சட்டதிட்டங்கள் என்பன இந்த அமைப்பினாலேயே உருவாக்கப்படுகின்றன. உலக வளிமண்டலவியல் அமைப்பின் தற்போதைய தலைவராக அலெக்சாண்டர் பெட்ரிட்ஸ்கி என்பவர் திகழ்கின்றார். பொதுச் செயலாளராக மைக்கல் ஜெரொட் என்பவர் பதவி வகிக்கின்றார்.

தரை, கடல், ஆகாயம் தொடர்பாக ஆய்வுகள் நடத்துவதற்காக இந்த அமைப்பில் வெவ்வேறு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவைதவிர, விமானப் போக்குவரத்து மற்றும் 'எல் நினோ' தோற்றப்பாடு என்பன பற்றியும் வெவ்வேறு பிரிவுகளின்கீழ் இந்த அமைப்பினால் ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. உலகின் வெவ்வேறு பகுதிகளில் காலநிலை மாற்றங்கள் (ஈரப்பதன், காற்றின் திசை, வேகம்) என்பனவற்றைக் கண்காணிக்கும் நேரம் மற்றும் காலத்தினைத் தீர்மானித்தல், காலநிலைத் தரவுகளை உலகுக்கு அறிவித்தல், உலகின் அனைத்து பிராந்தியங்களிலிருந்தும் பெறப்படுகின்ற காலநிலைத் தரவுகளை வரைபடமாக்குதல் என்பன உலக வளிமண்டலவியல் அமைப்பினால் மேற்கொள்ளப்படுகின்ற சில பணிகளாகும்.

## காலநிலை மாற்றங்கள் பற்றிய உபகுழு (IPCC)

இது உலக வளிமண்டலவியல் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டதாகும். இந்த அமைப்பினால் மேற்கொள்ளப்படும் பிரதான செயற்பாடுகளாவன;

✸ உலகின் பல்வேறு பிராந்தியங்களில் மேற்கொள்ளப்படும் காலநிலை ஆய்வுகளுக்கான நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

✸ துருவப் பிரதேசங்கள், பாலைவனப் பிரதேசங்கள், மலைச் சிகரங்கள், கடல் மற்றும் கடல் சார்ந்த உள்ளகப் பகுதிகளில் தானியங்கி காலநிலை உபகரணங்களை நிறுவுதல்.


✸ வரலாற்று ரீதியிலான காலநிலைத் தரவுகளைப் பெற்றுக்கொடுத்தல். உதாரணம் : மிகப் பழைமையான மரங்களின் குறுக்குப் பகுதியினைப் பெற்று, அதனை விசேட ஆய்வுக்குட்படுத்தி அன்றைய காலப்பகுதியில் நிலவிய காலநிலைத் தரவுகளைப் பெற்றுக்கொடுத்தல், துருவத் தட்டுக்களைத் துளையிட்டு அதனூடாகப் பெறப்படும் பனிப்படிவுகளின் ஊடாக காலநிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்ளல்.

## இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம்


இலங்கையில் முதன்முதலாக வளிமண்டலவியல் கண்காணிப்பு வலையமைப்பொன்று 1868 இல் அளவையியலாளராக இருந்த கேர்ணல் ஃபயர்ஸ் என்பவரின்



அளவீட்டு பலூனை வானுக்கு அனுப்புதல்



காற்றமுத்தமானி



வெப்பமானி



அளவீட்டு பலூன் கண்காணிக்கப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ண்டலவியல் கண்காணிப்பு



செய்மதிப் புகைப்படமொன்று
உலக வளிமண்டலவியல் அமைப்பின் இலச்சினை
உலக வளிமண்டலவியல் தலைமையகம்

தலைமையின்கீழ் ஆரம்பிக்கப்பட்டது. 1907 இல் அளவை திணைக்களத்தின் ஒரு பிரிவாக 'வான்பொருட்கள் ஆய்வகம்' ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தினை அடிப்படையாகக்கொண்டு, 1948 ஒக்டோபர் மாதத்தில் வளிமண்டலவியல் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போதளவில் இலங்கையில் 24 வளிமண்டலவியல் கண்காணிப்பு நிலையங்கள் உள்ளன. இவற்றில் கொழும்பு தேசிய வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலைய வளிமண்டலவியல் நிலையம் என்பன தரவு ஆய்வுகள் மற்றும் வானிலை எதிர்வுகூறல்களை தயாரித்தல் போன்ற விசேட பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. தவிர, தற்போதளவில் சுமார் 40 அளவிலான அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தாம் சுயமாக நடாத்தி வருகின்ற மழைவீழ்ச்சி நிலையம் மற்றும் விவசாய வளிமண்டலவியல் நிலையங்களினூடாக வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு காலநிலை கண்காணிப்பு அறிக்கைகளை சமர்ப்பித்து வருகின்றன.

உலக வளிமண்டலவியல் அமைப்பு மற்றும் சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு என்பனவற்றின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப, தேசிய ரீதியில் வளிமண்டலவியல் தொடர்பான தகவல்கள் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவது வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதான பணிகளாகும். இந்த சேவைகளை பிரதான இரு பகுதிகளுக்குள் அடக்க முடியும். அவையாவன;

* சில மணித்தியாலங்கள் அல்லது சில நாட்களுக்குள் வளிமண்டலத்தின் மாற்றங்களை அடிப்படையாகக்கொண்டு, அன்றாட சமூக-பொருளாதார செயற்பாடுகளுக்குத் தேவையான வானிலை எதிர்வுகூறல்களை வெளியிடல்.
* வார, மாத, வருட காலநிலை மாற்றங்களை கண்காணித்து, அவை தொடர்பான விஞ்ஞான ரீதியிலான ஆலோசனைகளை வழங்குதல்.



இந்த சேவைகளுடன் சூரியன் மற்றும் சந்திரன் உதயம்-மறைவு, கோள்களின் காட்சிகள், சூரிய கிரகணம், சந்திர கிரகணம் ஆகிய நிகழ்வுகள் குறித்த தகவல் சேவைகளை வழங்குதலும் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் செயற்பாடுகள்

* இலங்கையிலும் அதனைச் சூழவுள்ள கடற்பிரதேசங்களிலும் நிலவும் காலநிலையை அவதானித்தல்.
* காலநிலைத் தரவுகளை உலகிற்கு அறிவித்தல்.
* தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்.
* தரவுகளைப் பராமரித்தல்.
* ஊடகங்களினூடாக மக்களுக்கும் விமான, கடல் பயணங்களுக்கும் வானிலை எதிர்வு கூறலைப் பெற்றுக்கொடுத்தல்.
* முன்னேற்றகரமான 'ரேடார்' கண்காணிப்பு மற்றும் செயற்கைக்கோள் தொழில்நுட்பம் என்பனவற்றினூடாக தகவல்களை உடனடியாக பெற்றுக்கொள்வதற்கு வழியமைத்தல்.

## வளிமண்டலவியல் தரவுகள், தகவல்களை சேகரித்தல்

உலக வளிமண்டலவியல் அமைப்பின் இணக்கப்பாட்டிற்கு ஏற்ப; 00, 03, 09, 12, 15, 18 மற்றும் 21 ஆகிய க்றீன்வீச் நேர அடிப்படையில் ஒரே சமயத்தில் உலகின் சகல வளிமண்டலவியல் மத்தியநிலையங்களினாலும் காலநிலை மாறுதல்கள் கண்காணிக்கப்படுகின்றன. காற்று நிலைமை, ஈரப்பதன், முகில்கள் விபரம், நிலவுகின்ற மற்றும் நிலவிய வானிலை என்பன இதே [illegible] தரவுகளாகப் பெறப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

அவ்வாறே; 00, 06 மற்றும் 18 என்ற நேரங்களில் அதாவது, ஆறு மணித்தியாலங்களுக்கு ஒருமுறை தெரிவு செய்யப்பட்ட சில வளிமண்டலவியல் நிலையங்களினால் வளிமண்டல காற்றின் வெப்பநிலை, ஈரப்பதன், காற்றழுத்தம் என்பன கண்காணிக்கப்படுகின்றன. உலக வளிமண்டலவியல் அமைப்பின் பரிந்துரையின் அடிப்படையிலேயே இந்த வளிமண்டலவியல் நிலையங்கள் அமையப்பெற்று, செயற்பட வேண்டும். அதன்படி, காலநிலை அவதானிப்புகள் இடம்பெறும் பல்வேறு வழிகளாவன;

**1. புவி மேற்பரப்பு கண்காணிப்பு:** காற்றின் வேகம், திசை, தெளிவுத்தன்மை, முகில்களின் விபரங்கள், வெப்பநிலை, வணிமண்டலத்தின் அமுக்கநிலை, மழைவீழ்ச்சி, நிலவிய மற்றும் நிலவுகின்ற காலநிலை தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் இதில் அடங்கும்.

**2. ஆகாயக் கண்காணிப்பு:** ரேடார், பலூன்கள் மற்றும் இதர வான்பரப்பு பலூன்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் காலநிலை கண்காணிப்புகளை இதில் அடக்கலாம்.

**3. அளவீட்டு பலூன் கண்காணிப்பு:** 65 சென்ரிமீற்றர் விட்டம் அளவுக்கு ஹைட்ரஜன் வாயு நிரப்பிய பலூனை ஆகாயத்திற்கு அனுப்பி காற்றின் வேகம், திசை என்பனவற்றை கண்காணித்தலை இது குறிக்கும்.

**4. ரேடார் பலூன் கண்காணிப்பு:** 2 மீற்றர் விட்டம் வரை ஹைட்ரஜன் வாயு நிரப்பப்பட்ட 5 கி.கிராம் நிறைகொண்ட பலூனால் காற்றின் வேகத்தினை ரேடார் அலைகளின் ஊடாக கண்காணிக்க முடியும். ரேடியோ சொண்ட் எனும் உபகரணம் இந்த பலூனுடன் அனுப்பப்படுவதன் ஊடாக ஒவ்வொரு மட்டத்திலும் நிலவும் வெப்பநிலை, அழுத்தம், ஈரப்பதன் என்பனவற்றை துல்லியமாக அறிந்துகொள்ள முடியும்.

**5. செய்மதிப் புகைப்படங்கள்:** மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை செய்மதிப் புகைப்படங்கள் கொழும்பு தேசிய வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு கிடைக்கின்றன.

**6. துருவப்பகுதி செய்மதி புகைப்படங்கள்:** வட, தென் துருவப்பகுதிகளில் சுழலும் செய்மதிகளையே இவ்வாறு கூறுவர். இச்செய்மதிகள் வடக்கு முதல் தெற்கு நோக்கி செல்லும்போது ஒரு தொகுதி புகைப்படத்தினையும், தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும்போது ஒரு தொகுதி புகைப்படங்களையும் எடுக்கும். மோசமான காலநிலை பற்றி முன்னரே அறிந்துகொள்ளவும் அதன் முன்னேற்றம், பயணப்பாதை என்பனவற்றை அறிந்துகொள்ளவும் இந்த புகைப்படங்கள் உதவுகின்றன.

-(இ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஊரில் நற்குணமுள்ள ஓர் இளைஞன் இருந்தான். அவன் பிறர் துன்பம் அறிந்து உதவும் இயல்புடையவன். ஒருநாள் அவன் காட்டுவழியே சென்று கொண்டிருக்கையில், ஒரு கூக்குரல் கேட்டது. அந்த இளைஞன் கூக்குரல் கேட்ட பக்கம் சென்று பார்த்தான். அங்கே அவன் கண்ட நிகழ்வு அவனைத் திகைப்பிலும் அச்சத்திலும் ஆழ்த்தியது. காரணம், அங்கு ஒரு முதியவர் சிங்கம் ஒன்றுடன் போராடிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

அக்காட்சியைக் கண்ட அந்த இளைஞன் ஓடிப்போய் தானும் அதனுடன் போராடி அவரைக் காப்பாற்றினான். அந்த முதியவர் அவனைப் பாராட்டி தன்னிடமிருந்த மந்திர ஈட்டியை அவனுக்குப் பரிசாகக் கொடுத்து, "நீ எந்தக் கொடூரமானவனையோ அல்லது கொடூர மிருகத்தையோ நோக்கி இதனை எறிந்தால், இந்த ஈட்டி அவற்றைக் கொன்றுவிடும். அத்துடன், இதனை நல்ல நோக்கத்துக்காகப் பயன்படுத்து" என்று கூறினார்.

இதனால், இளைஞன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாலும் அவன் வசிக்கும் நாட்டு மன்னனின் மிகக் கொடூரமான ஆட்சியை நினைத்து வருந்தினான். அதனால் அந்நாட்டு மக்கள் நரக வேதனைகளை அனுபவித்து வந்தனர்.

இதேவேளை, அவனின் அயலூரில் தினமும் பதற்றமும் அழுகைச் சத்தமுமாக இருந்தது. அதற்குக் காரணம் என்னவென்று அந்த இளைஞன் விசாரித்தான்.

அதற்கு அவ்வூர் மக்கள் "இந்த ஊரில் தினமும் சிங்கம் ஒன்று வந்து அட்டகாசம் செய்கின்றது. இதுவரை அது பலரைக் கொன்றுவிட்டது" என்றனர். இளைஞன் அவர்களிடம் "நான் அந்த சிங் கத்தைக் கொன்று இவ்வூர் மக்களைக் காப்பாற்றுவேன்" என்று உறுதி கூறினான். அனைவரும் இதுகேட்டு மகிழ்ந்தனர்.

அத்துடன், அந்த இளைஞன் தன் மந்திர ஈட்டியை எடுத்துக் கொண்டு காடு நோக்கிச் சென்றான். சிங்கம் வரும் வழியில் அதை எதிர்பார்த்துக் காத்திருந்தான். அப்போது, சிங்கம் வருவதைக் கண்டு அவன் மந்திர ஈட்டியை எறிந்து அச்சிங்கத்தைக் கொன்றான். சிங்கம் இறந்த செய்தி கேட்டு மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இதனை அந்நாட்டின் கொடூர அரசனும் கேள்விப்பட்டான். உடனே, அவன் அந்த இளைஞனை அழைத்து அந்த மந்திர ஈட்டியைக் கேட்டு மிரட்டினான். இளைஞனும் அதனைக் கொடுக்கவே, அரசன் அதனை எடுத்துக்கொண்டு வேகமாக, காட்டுக்குச் சென்றான்.

ஒரு மானைக் கண்டதும் அதை நோக்கி மந்திர ஈட்டியை எறிந்தான். ஆனால், மான் சாகவில்லை.

இதனால், மிகுந்த கோபம் அடைந்த அவன் அந்த இளைஞனை மீண்டும் அழைத்து, "நீ என்னை நன்றாக ஏமாற்றிவிட்டாய். நீ மந்திர ஈட்டியை வைத்துக்கொண்டு எனக்கு சாதாரண ஈட்டியைத் தந்துவிட்டாய்" என்றான் மிகவும் கோபமாக. அவன் அரசனிடம் "அரசே! நீங்கள் மந்திர ஈட்டியை மட்டும்தானே கேட்டீர்கள். அதை எவ்வாறு உபயோகிப்பது என்று கேட்கவில்லையே" என்றான்.

அதற்கு மன்னன் "சரி, சரி இப்போது அதைக் கூறு" என்றான். அந்த இளைஞன் சாதுர்யமாக "நீங்கள் இந்த ஈட்டியை எறியும் முன்னர் உங்கள் திருமுகத்தை நினைத்து எறியுங்கள். அப்போது அந்த விலங்கு மடிந்துவிடும்" என்றான். இதைக் கேட்ட அந்தக் கொடூரமான மன்னன், "அப்படியாயின் உன்னையே முதலில் கொன்று பார்ப்போம்" என்று கூறி தன் முகத்தை நினைத்துக்கொண்டு இளைஞனை நோக்கி ஈட்டியை எறிந்தான். சிறிது தூரம் சென்ற மந்திர ஈட்டி திரும்பி வந்து மன்னனையே கொன்றது. அக்கொடூர மன்னன் இறந்த செய்தி கேட்டு அந்நாட்டு மக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர்.



# இளைஞனின் மதிநுட்பம்

சா.ஆன்டிலக்ஷி, தரம் - 9,
வ/இறம்பைக்குளம் ம.ம.வித்.,
வவுனியா.



# எத்தொழிலும் இழிவல்ல

ஒருமுறை மகாத்மாகாந்தியை சந்திப்பதற்காக ஓர் ஆங்கிலேயர் வருகை தந்தார். அவரை வரவேற்று உபசரித்த காந்தியிடம் அவர், "நான் உங்களுடன் சில நாட்கள் தங்கியிருக்க ஆசைப்படுகிறேன்" என்றார். மகிழ்ச்சியுடன் சம்மதித்த காந்தி அவர் தங்குவதற்காக ஒரு அறையை ஒதுக்கிக் கொடுத்தார்.

பின்பு அவர் அங்கு தங்கி சிலநாட்களில் தனக்கொரு வேலைக்காரனை ஏற்பாடு செய்து தருமாறு கூறினார். "சரி" என்ற காந்தி "நான் அதற்கு ஏற்பாடு செய்கின்றேன்" என்றார். மறுநாள் காலை கட்டிலை விட்டு எழுந்த ஆங்கிலேயருக்கு ஆச்சரியம்! தனது அறை நன்கு சுத்தப்படுத்தப் பட்டு குப்பைகள் அகற்றப்பட்டு, தனது உணவுப் பாத்திரங்கள் கழுவப் பட்டு, உடைகள் சுத்தப்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டார். பின்னர் மறுநாளும் இவ்வாறே நடைபெற காந்தியிடம் சென்ற அவர் "நீங்கள் அமர்த்திய வேலைக்காரன் மிகவும் சிறப்பானவன். நான் காலையில் எழுவதற்கு முன்னரே அனைத்து வேலைகளும் ஒழுங்காக நடைபெற்று விடுகின்றன" என்றார். காந்தியும் புன்னகை புரிந்தார். இவ்வாறே, சிலநாள் நடைபெற்று வர அந்த ஆங்கிலேயருக்கு அந்த வேலைக்காரனைப் பார்க்கவேண்டும் எனத் தோன்றியது. வழமையாக எழுந்திருக்கும் நேரத்தை விட சற்று முன்னதாக எழுந்த அவருக்கு பாத்திரங்கள் கழுவப்படும் சத்தம் கேட்டது. சமையலறைக்குச் சென்று பார்த்தவருக்கு ஒரே அதிர்ச்சி!!!

ஆம். அங்கே, காந்தி சுறுசுறுப்பாக பாத்திரங்களைக் கழுவிக்கொண்டிருந்தார். அவரிடம் சென்ற ஆங்கிலேயர் "என்ன இது தாங்கள் இந்த இழிவான வேலையை செய்கின்றீர்களே" என்று கேட்டேவிட்டார். காந்தி அமைதியாக "எந்தவொரு வேலையும் யாருக்கும் இழிவானதல்ல" என்றார். வெட்கித் தலை குனிந்த அந்த ஆங்கிலேயர் அன்றிலிருந்து தனது வேலையை தானே செய்யத் தொடங்கினார்.

தொகுப்பு: என்.நுஸ்ரத் பானு,
தரம் - 10',
புனித அந்தோனியார் ம.கல்.,
கண்டி.




# சேர் ஐசெக் நியூட்டன்



1642 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி ஐசெக் நியூட்டன் பிறந்தார். இவர் பிறப்பதற்கு முன்பே அவரின் தந்தையார் இறந்துவிட்டார். அதனால், இவரின் குடும்பம் வறுமையில் வாடியது. அத்துடன், இவரின் தாயார் மறுமணம் செய்துகொண்டார். இதனால், நியூட்டன் தனது பாட்டியாரிடமே வளர்ந்து வந்தார்.

தமது இளமைப் பருவத்தில் காற்றாடி, நீர்க் கடிகாரம் போன்றவற்றை உருவாக்கினார். அத்துடன், நியூட்டன் வாசிப்பதிலும் சிந்திப்பதிலும் மிகுந்த ஆர்வம் காட்டினார். தமது 22 ஆவது வயதில் பட்டதாரியானதுடன், 24 ஆவது வயதில் கணிதப் பேராசிரியரானார்.

அத்துடன், சூரிய ஒளியை பரிசோதனைக்குட்படுத்தி, இதன் மூலமாக சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் உண்டு என்பதைக் கண்டறிந்தார்.

ஒருநாள் மர நிழலில் இருந்து சிந்தனையில் மூழ்கியிருந்தபோது, அப்பிள் பழமொன்று அவரருகில் விழுந்தது. அந்த நிகழ்வானது அவரது சிந்தனையை மேலும் தூண்டியது.

எப்பொருளும் கீழே விழுவது ஏன்? அவை மேல் நோக்கி ஏன் செல்வதில்லை? எனச் சிந்தித்தார். அதற்கு விடை கண்டுபிடிக்கவும் முனைந்தார். ஈற்றில் புவியீர்ப்புச் சக்தியே அதற்குக் காரணம் என்பதைக் கண்டறிந்தார்.

காலப்போக்கில் அவரது திறமையைப் பாராட்டி அவருக்கு 'சேர்' பட்டம் வழங்கப்பட்டது.

எஸ்.பிரியதர்ஷினி,
தரம் - 7^A, நு/நானுஓய த.ம.வித்.,
நானுஓய.

# விந்தை விடயங்கள்!

★ சாதாரணமாக ஒரு படுக்கையில் 600 கோடி நுண்ணுயிர்கள் உள்ளன.
★ நீலத் திமிங்கிலம் எழுப்பும் ஒருவகை 'விசில்'தான் விலங்குகள் எழுப்பும் சப்தங்களில் மிகவும் பலமானது. அதன் அளவு 188 'டெசிபல்கள்'.
★ எலும்பில் தயாரிக்கப்பட்ட ஒரு புல்லாங்குழல்தான் உலகத்திலேயே மிகவும் பழைமையானது. ஒரு பெரிய பறவையின் இறக்கை எலும்பில் தயாரிக்கப்பட்ட அந்த புல்லாங்குழல் 9 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. சீனாவில் ஒரு பழைமையான கல்லறைப் பகுதியில் அது கண்டு பிடிக்கப்பட்டது.
★ ஒரு பூனைதான் நுழைவதற்கான இடத்தின் அளவை தனது மீசை முடியைக் கொண்டு கணக்கிடுகிறது.
★ ஜெல்லி மீனில் 95 சதவீதம் தண்ணீர்தான் உள்ளது.
★ கால் நகங்களைவிட கை நகங்கள் 4 மடங்கு வேகமாக வளர்கின்றன.
★ நாம் ஓராண்டுக்கு ஒரு கோடி முறை கண் சிமிட்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3661

டி.ஜூட்சன்,
தரம் - 9B,
புனித ஜோன்ஸ் கல்.,
அல்லைப்பிட்டி.


அங்.இல: 3662

எம்.ஸஃப்ராஸ்,
தரம் - 6C,
ஓமர் ஃபாரூக் மு.வித்.,
புத்தளம்.


அங்.இல: 3663

செ.தினுக்குமார்,
தரம் - 8D,
கொக்குவில் இ.கல்.,
கொக்குவில்.


அங்.இல: 3664

அப்துல் கயூம்,
தரம் - 8,
பாலமுனை அஷ்ரப் வித்.,
மட்டக்களப்பு.


அங்.இல: 3665

எம்.இர்ஷாத்,
தரம் - 7,
ஸாஹிரா கல்.,
தர்கா நகர்.


அங்.இல: 3666

எச்.முனாசிக்,
தரம் - 5A,
அல்-அஸ்ஹர் வித்.,
வரிப்பத்தான்சேனை.


அங்.இல: 3667

என்.டிலக்ஷி,
றோமன் கத்தோலிக்க
க.த.பாட.,
வத்தளை.


அங்.இல: 3668

சி.ஜயமதி,
உயர் தரம்,
களுத்துறை மு.ம.வித்.,
களுத்துறை.


அங்.இல: 3669

எஃப்.அஃப்ரீன்,
தரம் - 7D,
மஹ்மூத் பெ.கல்.,
சாய்ந்தமருது-03.


அங்.இல: 3670

க.கனிஸ்டன்,
தரம் - 7,
நானாட்டன் ம.வித்.,
மன்னார்.


அங்.இல: 3671

ந.சுஜிகாந்,
தரம் - 7,
சாவகச்சேரி இ.கல்.,
யாழ்ப்பாணம்.


அங்.இல: 3672

பஸீல் முஹம்மட்,
உயர் தரம்,
இக்ராஃ ம.வித்.,
மட்டக்களப்பு.

# சட்டம் பயிலச் சென்று வானசாஸ்திரியானவர்

சட்டக்கல்வி பயிலச் சென்று வானியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு இன்றைய வானியல் ஆராய்ச்சியின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களில் ஒருவரே டைகோ பிரேஹி. அப்போதைய டென்மார்க்கின் பகுதியும் தற்போதைய நவீன சுவீடனின் பகுதியுமான ஸ்கேனியாவில் 1546 ஆம் ஆண்டு பிறந்தார் பிரேஹி.

சட்டம், ரசாயனம், வானியல் ஆகியவற்றைப் பொழுதுபோக்காகக் கற்று வந்த பிரேஹியின் உள்ளம் வானியலிலேயே மிகுதியாக ஈடுபட்டது. சட்டம் பயிலுவதற்காகக் கல்லூரியில் சேர்க்கப்பட்ட அவர் சட்ட நூல்களைத் தொடவே இல்லை. அதற்கு மாறாக, இரவுவேளைகளில் திறந்த வெளியில் கழித்த வண்ணம் வானத்திலிருக்கும் விண்மீன்களைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தார். விண்மீன்கள் எந்தெந்த வேளையில் தோன்றுகின்றன. அவற்றின் பெயர்ச்சிக்கான காலம் எவ்வளவு என்ற ஆராய்ச்சியில் பொழுதைப் போக்கினார். சட்டம் பயிலச் சென்றவர் வானியல் ஆராய்ச்சியில் கவனம் செலுத்தினார்.



1571 இல் பிரேஹி தன் மாமனார் ஒருவரின் கோட்டையில் ஆய்வுகூடம் ஒன்றை நிறுவி ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அடுத்த ஆண்டில் அவர் 'கேசியோபியா' விண்மீன் கூட்டத்தில் புதிய விண்மீன் ஒன்றைக் கண்டுபிடித்தார். 1575 இல் டென்மார்க் மன்னரான இரண்டாம் பிரெடரிக் அவருக்கு உதவித் தொகையுடன் ஸ்வென் என்ற தீவையும் அளித்தார்.

அத்தீவில் உரானிபார்க் (விண்ணுலகங்களின் கோட்டை) என்ற பெயரில் வானியல் ஆராய்ச்சிக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டது. 25 ஆண்டுகள் அங்கே தங்கியிருந்து பிரேஹி தம் ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தார். அக்காலத்தில் வானியல் பற்றிய பல புதுமைகளையும் அவர் கண்டுபிடித்தார். 1597 ஆம் ஆண்டில் இரண்டாம் பிரெடரிக்குக்குப் பின்னர் அரியணையேறிய நான்காவது கிறிஸ்டியன் என்பவன் பிரேஹி பெற்று வந்த உதவித் தொகையையும் அவர் வாழ்ந்து வந்த தீவையும் திரும்பப் பெற்றுக்கொண்டான். அதன்பின்னர், பிரேஹி ஹம்பர்க் அருகிலுள்ள வாண்ஸ்பர்க் எனுமிடத்தில் சிறிது காலத்தையும் விட்டர்பர்க்கில் சிறிது காலத்தையும் கழித்துவிட்டு, பிரேக் நகரம் வந்து சேர்ந்தார். அங்கே இரண்டாம் ருடொல்ப் மன்னனின் ஆதரவில் இரண்டாண்டு காலம் வாழ்ந்திருந்த அவர் 1610 இல் காலமானார்.


## துஷாரா கலைவட்டம் - 2010

## எக்ரோன் அகில இலங்கை சித்திரப் போட்டி

**(இலங்கையில் 15 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்ற ஒரேயொரு மிகப்பிரமாண்டமான சித்திரப்போட்டி)**

எக்ரோன் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடனும் விஜய், விஜய, பிலிந்து பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் துஷாரா கலைவட்டத்தினால் அகில இலங்கை ரீதியில் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும். மேற்படி போட்டி தொடர்பான விபரங்களும் நிபந்தனைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**போட்டி விதிமுறைகள்**

* அளவு - அங்குலம் 14×18 அளவு
* வர்ணம் - சோக் (வர்ணப்பூச்சு), ஒயில் பெயின்ட், போஸ்டர் பெயின்ட், வோட்டர் கலர்ஸ் ஆகியனவற்றில் விரும்பியதைப் பயன்படுத்தலாம்.
* தலைப்பு - எந்வொரு தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம்.
* ஒருவர் ஆகக்கூடியதாக 5 சித்திரங்களை அனுப்பி வைக்கலாம்.
* பிரிஸில் போர்ட், கென்வஸ் துணி, ட்ரொயிங் பேப்பர் இவற்றில் விருப்பமான ஒன்றில் சித்திரத்தை வரையலாம்.

**போட்டிப் பிரிவுகள்**

* முன்பள்ளி மாணவர்கள் (5 வயதிற்குக் கீழானோர்)
* பாடசாலை மட்டத்தில் - தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் (13 பிரிவுகள்)
* பகிரங்க போட்டிப் பிரிவு - பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது வேறு எவரும் (18 வயதிற்குக் கீழ்)

நீங்கள் இந்தப் போட்டியில் Acron தயாரிப்பான எந்தவொரு வர்ணத்தையும் (சோக், வோட்டர் கலர்ஸ், போஸ்டர் கலர், ஒயில் பெயின்ட்) பயன்படுத்தினீர்களாயின் அவற்றின் அட்டைப் பெட்டியில் காணப்படும் வெள்ளை நிற லேபிளை சித்திரத்தின் பின்புறம் ஒட்டி அனுப்பவும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படாத 2500 சித்திரங்களுக்குரிய சான்றிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். Acron குறியீட்டு இலச்சினை ஒட்டப்பட்டுள்ள சித்திரங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

| பரிசுத் தெரிவுகள் ( அகில இலங்கை) | | |
|---|---|---|
| முதலாவது இடத்தைப் பெறும் 15 பேர் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக (தரம் 1 முதல் தரம் 13 வரை) | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| இரண்டாவது இடத்தைப் பெறும் 15 பேர் | தெரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம்,வெள்ளிப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| மூன்றாவது இடத்தைப் பெறும் 15 பேர் | பிரிவுக்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், வெண்கலப் பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron ஒயில் பெயின்ட் 15 போட்டியாளர்கள் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதம் | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron அதிவிசேட வெற்றியாளர்கள் 15 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron விசேட வெற்றியாளர்கள் 150 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron சான்றிதழ் பெறுவோர் 400 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |
| திறமைச்சான்றிதழ் 2000 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |

Acron லேபிள் ஒட்டப்பட்ட 100 சித்திரங்களை அனுப்பச் செய்கின்ற ஆசிரிய, ஆசிரியைமாருக்கு நினைவுச் சான்றிதழும் ஊக்குவிப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.
(இதற்கென குறிப்பிட்ட 100 சித்திரங்களுடன் ஆசிரியர்/ஆசிரியையின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியனவற்றைக் குறிப்பிடல் வேண்டும்)
சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலுமான நடுவர்களாலேயே வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.
வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படுவதுடன், 'விஜய்' பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி மூலமும் அறிவிக்கப்படும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படுகின்ற 2500 சித்திரங்களும் தேசிய கலாபவனத்தின் பிரதான மண்டபங்கள் இரண்டிலும் கண்காட்சிக்கு வைக்கப்படுவதுடன் குறித்த 2500 சித்திரங்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் வைத்து வழங்கப்படும்.

**போட்டி முடிவுத்திகதி 2010 ஜூலை 31.**

**முகவரி:** துஷாரா கலைவட்டம், இலக்கம் - 16/19, பிங்ஹேன, பன்னிப்பிட்டி.
அல்லது கலர் கிராஃப்ட் லங்கா, 119, பெங்க்ஷால் வீதி, கொழும்பு-11.

**தொடர்புகளுக்கு** - 011 4962520, 0714483704.

## துஷாரா கலைவட்டம்

THUSHARA KALA KAVAY A

Color CRAFT

அகில இலங்கை சித்திரப்போட்டி-2010

Acron® All Island Art Competition

விண்ணப்பப்படிவம் — Application Form

போட்டியாளரின் பெயர்:
Applicant's Name :

முன்பள்ளி/பாடசாலை/
பல்கலைக்கழகம்/பகிரங்க :
Pre School, Schools, University & Open Category :

பிறந்த திகதி:
Date of Birth :

ஆண்/பெண்
Sex :
ஆண் Female ☐ பெண் Male ☐

வீட்டு முகவரி:
Personal Address :

தொலைபேசி இல:
Telephone :

வகுப்பு:
Grade :

சித்திரத்தின் தலைப்பு:
Topic :

பாவித்துள்ள வர்ணம்:
Medium of Expression
Oil, Water color, Poster CLR, Pastels :

போட்டியாளரின் கையொப்பம் — Applicant's Signature
திகதி — Date
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் — Parents/ Guardians Signature

பிரதான அனுசரணை: Acron COLSTAR
ஊடக அனுசரணை:

சித்திரக்கலையின் பேரபிமானம் பெற்ற முதன்மையாளர்களான துஷாரா கலைவட்ட அமைப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மல்ஹறுஸ் ஷம்ஸ் மகா வித்தியாலய மாணவன் அஹமட் லெவ்வை றுஸ்தியின் 'கைவண்ணக் கண்காட்சி' அண்மையில் மாளிகைக்காடு அல்-ஹுஸைன் வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதன் போது, பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட 'அறம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் நளீம் லதீப், சிறப்பு அதிதியாக கலந்துகொண்ட ஜனாதிபதி சாரணர் விருது பெற்ற சம்றோஸ் மற்றும் மாணவன் றுஸ்தி ஆகியோர் வரவேற்கப்படுவதனையும் கண்காட்சியின் ஒரு பகுதியினையும் படங்களில் காணலாம்.



நானாட்டான், மடுக்கரையைச் சேர்ந்த ரமேஸ்-வாஜினி தம்பதியரின் செல்வப் புதல்வர்களான டனுஸ், வினுஸ் ஆகியோர், 16.07.2010 அன்று தமது இரண்டாவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடவுள்ளனர். இவர்களை பெற்றோர் உட்பட உறவினர்கள் அனைவரும் அம்மன் அருள் பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.






திக்குவல்லையைச் சேர்ந்த அஸீஸ்-நஸீமா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மட் யூஸுப், 17.07.2010 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்-அஸ்ரான் காதர்)




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.இமாம்கான், தரம் - 3T,
மதீனா ம.வித்., கனேதென்ன.



எஃப்.அஃப்ரோஸ், தரம் - 4T,
நல்லாயன் ம.கல்., நுவரெலியா.



திலீப தில்ஷான், தரம் - 5B,
கிங்ஸ்டன் சர்வதேச பாட., கொழும்பு-15.



இஜாஸ் முஹம்மட், தரம் - 10A,
அல்-தாரிக் மு.வித்., கந்தளாய்.




எல்.அஜீதா, தரம் - 4A,
புனித மரியாள் த.ம.வித்.,
எட்டியாந்தோட்டை.




ஆமீஷா நஃப்லா,
பாலர் வகுப்பு,
பாலர் பாடசாலை,
நாவலப்பிட்டி.



எம்.அமான்,
தரம் - 9B, குருகுத்தலை மு.ம.வித்.,
கடுகண்ணாவ.



வி.கோகிலவாணி, தரம் - 11,
கம்பஹா த.ம.வித்., உடப்புஸ்ஸல்லாவ.



நி.இஹ்லாஸ், தரம் - 6B,
புதுக்குடியிருப்பு அ.மு.க.பாட.,
மன்னார்.




இ.ஜவாநீசன், தரம் - 11,
யாழ்.இந்துக் கல்.,
யாழ்ப்பாணம்.




சு.வனிதாதர்ஷனி,
தரம் - 7B, இ/சீ.சீ.த.ம.வித்.,
பலாங்கொடை.

# ஓவியம் வரைவோம் - 07

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

கடந்த இதழ்களிலிருந்து சில விலங்குகளை வரையும் இலகு முறைகள் குறித்த பயிற்சிகளை நாம் செய்து வருகின்றோம். அதே வரிசையில், இவ்விதழில் யானை ஒன்றை வரைவது குறித்து இரண்டு பயிற்சிகளை செய்வோம்.


## யானை ஒன்றை வரைவோம்




1. சேற்று உருண்டைபோன்ற வட்டமொன்றை வரையுங்கள்.
2. அந்த வட்டத்திற்கு இடது பக்கத்தில் அதே போன்ற மற்றுமொரு பெரிய வட்டமொன்றை வரையுங்கள்.
3. பின்னர் துதிக்கை, காதுகள், கண், கால்கள், வால் போன்றவற்றை வரைந்துகொள்ளுங்கள்.
4. பின்னர் தேவையற்ற கோடுகளை அழித்துவிடவும்.
5. கால்களின் நகங்களுக்குத் தேவையான இடத்தில் கறுப்பு நிறத்தைப் பயன்படுத்தி யானையின் உருவத்தைப் பூரணப்படுத்துங்கள்.

## யானையின் முன்புறத் தோற்றம்

அ. சேற்று உருண்டை போன்ற வட்டமொன்றை வரைக.
ஆ. அந்த வட்டத்திற்குப் பொருத்தமான அளவில் துதிக்கை ஒன்றை வரையுங்கள்.
இ. அடுத்ததாக, உருண்டையின் இரு புறங்களிலும் காதுகள் இரண்டை வரையுங்கள்.
ஈ. உடற்பகுதியை வரைந்து கால்கள், கண்கள், வால் என்பனவற்றையும் வரையவும்.
உ. கால்விரல்கள், துதிக்கை என்பனவற்றில் உரிய அடையாளங்களை இட்டு, படத்தைப் பூர்த்தி செய்க.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01 பறவைகளில் புத்திசாலி!

# அமைதியே இல்லாத குணம்



வழக்கம் போல ஆண் வான்கோழி ஏனைய பறவைகளுக்கு முன்னால், விழித்துக்கொண்டு தன் மனைவியை எழுப்பிற்று. ''நான்தான் எல்லாப் பறவைகளையும் விடப் புத்திசாலி, அப்படித் தானே?'' என்று கேட்டது.

பெண் வான்கோழி தூக்கக் கலக்கத்தில் வெகுநேரம் இருந்துவிட்டு, ''ஆகா, எப்படிப் பட்ட புத்திசாலி....நீங்கள் இதில் என்ன சந்தேகம்?'' என்று பதில் கூறிற்று. ஆண் வான்கோழிக்கு அந்த பதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும் மற்றப் பறவைகளை நினைக்கையில் கோபம் கோபமாக வந்தது. ஏனைய பறவைகளின் காதுகளில் கேட்கும்படி குரலை உயர்த்திக் கூறிற்று; ''உன்னைப் போல் ஏனைய பறவைகள் என்னை அவ்வளவாக மதிப்பதில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

''இல்லை, இல்லை உங்களுக்குத்தான் அப்படித் தோன்றுகிறது. உங்களைவிடப் புத்திசாலியான பறவைகளை யாரும் பார்த்திருக்க முடியாது'' என்று கூறிவிட்டு இரவில் கலைந்திருந்த இறகுகளைக் கோதிவிட்டுக் கொள்ளத் தொடங்கிற்று பெண் வான்கோழி. ஆண் வான்கோழி தொடர்ந்து கூறியது. ''தாராவைப் பார்த்தியா? அது வெளியே ஒன்றும் சொல்வதில்லை. பெரும்பாலும் வாயை மூடிக்கொண்டிருக்கிறது. பேசாமல் அது என்னை இளப்பம் செய்கிறது என்று எனக்குப் படுகிறது...''

''அதைச் சட்டை பண்ண வேண்டாம். அது ஒரு அசடு என்பதை நீங்கள் கவனிக்கவில்லையா?''

''அது யாருக்குத்தான் தெரியாது? அசட்டுத் தாரா என்பது அதன் முகத்தில் எழுதி இருக்கிறதே. ஊம்..... போனால் போகிறது, அந்த அசட்டுப் பறவை மேல் நான் கோபப்படலாமா? ஆனால், சேவல், சாதாரணமான அந்த அற்பச் சேவல்... மூன்றாம் நாள் அது என்னைப் பற்றி என்ன கூறிற்று? அண்டை அயலார் எல்லோரும் கேட்கும்படி! என்னைப் படு அசடு என்றுகூட அது சொல்லிற்று என்று நினைக்கிறேன்...ஆம்! இந்த மாதிரி மேலும் ஏதோ சொல்லிற்று''

பெண் வான்கோழி அடக்கமும் நல்ல மனமும் உள்ள பறவை. ஆண் வான்கோழி ஓயாமல் யாருடனாவது சச்சரவு செய்து கொண்டிருந்ததால் அதற்கு எப்போதும் ஒரு வருத்தம் உண்டாயிற்று. இன்றும், தூங்கி விழித்ததும் விழிக்காததுமாக யாருடனாவது வாய்ச்சண்டையோ, அடிபிடிச் சண்டையோ போடுவதற்கு ஆண் வான்கோழி வழி பார்த்தது. இந்த ஆண் வான்கோழி கெட்டது இல்லை என்றாலும் மொத்தத்தில் அமைதியே இல்லாத பறவை. மற்றப் பறவைகள் ஆண் வான்கோழியைக் கேலி செய்வதும், உளறுவாயன், வெட்டிப் பேச்சுப் பேசுபவன், பிகு பண்ணிக் கொள்பவன் என்று பட்டங்கள் சூட்டியதைக் கேட்டுப் பெண் வான்கோழிக்குக் கொஞ்சம் மனத் தாங்கல் கூட ஏற்பட்டது. ஆனால், அவை கூறியவை ஓரளவு உண்மைதான் என்றாலும் குறைகள் இல்லாத பறவைகள்தான் ஏது? அந்த மாதிரிப் பறவைகள் எதுவும் கிடையாது. ஆனாலும், ஒரு பறவையிடம் அற்பக் குறைகளைக் காணும்போது மற்ற பறவைகளுக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி.

விழித்துக்கொண்ட பறவைகள் கோழிக் கூட்டில் இருந்து சரசரவென்று வெளியே வந்து முகப்பில் குழுமின. இதனால், ஒரே கத்தலும் கூவலும் காதைத் துளைத்தன. எல்லாவற்றிலும் மோசமாகக் கத்தின கோழிகள். அவை முகப்பில் ஓடி, சமையலறைச் சன்னல் மேல் தொற்றிக்கொண்டு வெறிக் கூச்சல் போட்டன;

''எங்கே அந்த வேலைக்காரி மத்ரியோனா செத்துப் போய் விட்டாள் போலிருக்கிறது. எங்களைப் பட்டினி போட்டுக் கொல்லப் பார்க்கிறாள் போலிருக்கிறது'' அவற்றின் கூச்சல் அதிகமாக அதிகமாக பதற்றப்பட்ட தாரா அவைகளை அமைதிப்படுத்த முனைந்தது. ''திருவாளர்களே, பொறுமையாக இருங்கள். என்னைப் பாருங்கள். எனக்குந்தான் பசிக்கிறது. ஆனால், நான் உங்களைப் போல் கத்தவில்லையே. ஆகவே, பொறுமையாக இருங்கள்'' என்று மீண்டும் கூறியது. அவைகள் போட்ட காட்டுக் கத்தலில் சமையல்காரி மத்ரியோனா திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள்.

ஆண் வான்கோழி பெருமிதமானது ஆகையால், அது மற்றப் பறவைகளோடு சேர்ந்து இரைக்காக ஒருபோதும் அட்டகாசம் செய்வதில்லை. வேலைக்காரி மத்ரியோனா பேராசை பிடித்த மற்றப் பறவைகளை விரட்டி விட்டுத் தன்னைக் கூப்பிடும்வரை பொறுமையாகக் காத்திருந்தது ஆண் வான்கோழி. அத்துடன், வேலி ஓரமாக உலாவியபடி, பல வகைக் குப்பையில் எதையோ தேடுவது போலப் பாவனை வேறு செய்தது.

ஆண்கோழியின் பின்னே அடிமேல் அடி வைத்து நடந்து கொண்டிருந்த பெண் வான்கோழி, ''ஐயோ, என்னமாய்ப் பசிக்கிறது எனக்கு'' என்று முணுமுணுத்தது. ''அதோ, மத்ரியோனா ஓட்ஸ் தானியத்தைப் போட்டுவிட்டாள். அதோடு, நேற்றைய பொங்கல் மிச்சத்தையும் போட்டுவிட்டாள் போலிருக்கிறது. ஆகா, பொங்கல் எனக்கு மிகவும் பிடிக்கும். வாழ்நாள் முழுவதும் பொங்கலை மட்டுமே உண்டு கொண்டிருக்க நான் தயார். சில வேளைகளில் கனவில் கூடப் பொங்கலைக் காண்கிறேன்....''

''ஆமாம், பொங்கல் உண்பது மிக நன்றாகத்தான் இருக்கும்'' என்று அதன் கருத்தை ஒப்புக்கொண்டது ஆண் வான்கோழி. ''ஆனால், அறிவுள்ள பறவைகள் இரை மேல் ஒருபோதும் பாய்வதில்லை. சரிதானே நான் சொல்வது? எஜமானன் எனக்கு இரையை ஊட்டாவிட்டால் நான் பட்டினியால் செத்துப் போவேன்... அப்படித்தானே? ஆனால், என்னை மாதிரி இன்னொரு வான்கோழி அவனுக்கு எங்கிருந்து கிடைக்கும்?''

''இந்த மாதிரி விளக்கம் சொல்லிக்கொண்டிருந்தாலும் பசிக்கொடுமை ஆண் வான்கோழியை வாட்டத் தொடங்கிவிட்டது. ஏனைய பறவைகள் எல்லாம் பசி தீர இரையெடுத்த பின்னர் தன்னைக் கூப்பிடுவதற்கு வேலைக்காரி மத்ரியோனா வெளியே வராததைக் கண்டு அதற்கு ஏக்கம் உண்டாயிற்று. அவள் என்னை மறந்து போனாளோ? அப்படி என்றால் என் நிலைமை படுமோசம் ஆகிவிடுமே'' என்று சிந்தித்தது.

அப்போது ஆண் வான்கோழி தன் பசியைக்கூட மறந்து விடும்படி செய்தது நிகழ்வொன்று. கொட்டகையின் பக்கத்தில் உலாவிக் கொண்டிருந்த ஓர் இளம் பெண்கோழி திடீரென்று ''கொக்-கொக்-கோ!'' என்று அவலக்குரல் எடுத்துக் கத்திற்று.

(தொடரும்...)

# பாதையை மாற்றிய பயணம்

சுமன் எப்போதும் சன நெருக்கமுள்ள பஸ்ஸில்தான் பாடசாலைக்குச் செல்வான். காரணம் சனக்கூட்டத்தில் டிக்கட் எடுக்காமல் இருப்பதற்குத்தான். கூட்டமாக இருப்பதால் நடத்துனராலும் யார் யார் டிக்கெட் எடுத்தார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. இப்படியாக பஸ்ஸில் டிக்கெட் எடுக்காமலும் பெற்றவர்களிடம் செலவுக்காக கேட்டு வாங்கும் பணத்திலும் பாடசாலை செல்லாமல் ஊர் சுற்றுவான் சுமன்.

அன்றும் வழக்கம்போல் பயணம் தொடர்ந்தது. அப்போது பெரியவர் ஒருவர் ஏறினார். சுமன் படியில் நின்று கொண்டிருந்தான். ஒரே கூட்டம். நடத்துனர் ''டிக்கெட்... டிக்கெட்...'' என்று கேட்டுத் தொந்தரவு செய்யவே, அன்று ஏமாற்ற வேண்டாம் என்று நினைத்த சுமன் டிக்கெட் ஒன்றை வாங்கிக் கொண்டான்.

அப்போது, அந்தப் பெரியவர் டிக்கெட்டுக்கான பணத்தை நீட்டினார். நடத்துனர் சுமனின் அருகில் இருந்ததால் பெரியவரின் அருகில் இருந்தவர்கள் ஒருவர் கை ஒருவர் மாற்றி கடைசியில் பணத்தை வாங்கி சுமனிடம் கொடுத்து, ''தம்பி, பெரியவருக்கு டிக்கெட் ஒன்று வாங்கிக்கொடுப்பா'' என்றனர்.

நடத்துனர் முன்புறம் பார்த்து டிக்கெட் கேட்பதில் ஈடுபட்டிருந்தார். அதற்குள் அவன் இறங்க வேண்டிய இடமும் வந்துவிட்டது. சட்டென தன்னிடம் இருந்த தனது டிக்கெட்டை எடுத்து பெரியவரிடம் கொடுத்துவிட்டு, அந்தப் பணத்தை தன் பையினுள் நுழைத்தான் சுமன். 'ஆகா, இன்னிக்கு நாம முழிச்சது நரி முகத்தில போல இருக்கு.... இல்லாட்டி நாம டிக்கெட் வாங்கினாலும் ஏன் அனாவசியமா செலவு செய்தேன்னு சொல்லாமல் சொல்லி அந்த டிக்கெட்டுக்கான பணத்தை பெரியவர் மூலமாக கடவுள் நமக்கு கிடைக்க வெச்சிருப்பாரா...' என்று நினைத்துக்கொண்டு அவன் பஸ் தரிப்பிடத்தில் இறங்கவும் டிக்கெட் பரிசோதகர் வரவும் சரியாக இருந்தது.

''தம்பி, உன் டிக்கெட்டைக் கொடு?''

''சேர் வந்து...'' என்று சொல்லியபடி பையினுள் கைவிட்டு பாசாங்கு செய்தான்.

''என்ன கிடைச்சுதா?''

''இல்ல சேர், கூட்டத்துல எங்காச்சும் விழுந்திருக்குமோன்னு நினைக்கிறேன்''

''இத்தனை பேரும் கூட்டத்துலதானே நின்னுகிட்டு வந்தாங்க. உன்னோட டிக்கெட் மட்டும் எப்படிக் காணாமல் போச்சு?''

''இல்ல சார், உண்மையிலேயே நான் டிக்கெட் வாங்கினேன்''

''அப்படின்னா டிக்கெட்டைக் காட்டு, இல்லாட்டி அபராதம் கட்டிட்டுப் போ''

''சேர்....சேர்.... அவ்வளவு பணம் இல்ல. வேணும்னா டிக்கெட்டுக்கான பணத்தை கொடுத்துடறேன்'' என்று கெஞ்சினான் சுமன்.

''அது சரிவராது தம்பி, பைன் கட்டு. இல்ல பொலிஸ்ல ஒப்படைச்சுடுவோம். என்ன சொல்ற?''

அவன் தலையைக் குனிந்து கொண்டான்.


''எந்த ஸ்கூல்ல படிக்கிற?'' பாடசாலை பெயரைச் சொன்னான் சுமன்.


''ஏம்பா, இதைத்தான் ஸ்கூல்ல சொல்லிக் கொடுத்திருக்காங்களா?'' பரிசோதகர் கோபமாகக் கேட்டார்.

அப்போது, பஸ்ஸிலிருந்து இறங்கிய சுமனின் ஆசிரியர் வேகமாக டிக்கெட் பரிசோதகரை நோக்கி வந்தார்.

''சேர் நான் இவனோட ஆசிரியர். நாங்க நல்லொழுக்கத்தைத்தான் பாடசாலையில் போதிக்கிறோம். பயணிக்கும் பஸ்ஸில் டிக்கெட் வாங்க வேண்டாமென்று போதிப்பதில்லை. உங்களிடம் மாட்டிக்கொண்ட இவன் ஒழுங்கீனமானவன். பாடசாலைக்கு பல நாட்கள் கட் அடித்து, ஊர் சுற்றித் திரிபவன். இருந்தாலும் இவன் என் மாணவன் என்பதால் இவன் செயலுக்கு வெட்கப்பட்டு, நீங்கள் கேட்கும் அபராதத்தை நானே கட்டி விடுகிறேன்'' என்று கூறி தன் பர்சிலிருந்து பணத்தை எடுத்து பரிசோதகரிடம் கொடுத்தார்.

நல்லொழுக்கம் போதிக்கும் ஆசிரியருக்கும் நற்பண்புகள் வளர்க்கும் கல்விக்கூடத்துக்கும் தன்னுடைய செயலால் கெட்ட பெயர் உண்டானதற்காக மனம் வருந்தி, அழுது ஆசிரியரின் கால்களில் விழுந்தான் சுமன். அன்று மாலையே தன் பெற்றவர்களிடம் நடந்ததை மறைக்காமல் கூறி அவர்களிடம் தன் செயலுக்காக மன்னிப்புக் கேட்டான். அத்துடன், நிற்காமல் தமிழ் ஆசிரியர் அபராதமாகச் செலுத்திய பணத்தையும் அப்பாவிடம் வாங்கி திருப்பிக் கொடுத்தான். இப்போது பஸ்ஸில் ஏறிய உடனேயே முதல் ஆளாக டிக்கெட் எடுப்பதுடன், படியில் நின்று பயணிப்பதையும் விட்டுவிட்டான் சுமன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் அக்கா, தங்கை, வியாபாரி ஆகியோருக்கு இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

අක්කා: නංගි ඔයා ලෑස්තිද?
நங்கி ஒயா லெஹெஸ்தித?
அக்கா: தங்கச்சி நீங்கள் ஆயத்தமாகிவிட்டீர்களா?

නංගි: ඔව් අක්කේ, මම ලෑස්තියි.
ஒவ் அக்கே, மம லெஹெஸ்திய்.
தங்கை: ஆம் அக்கா, நான் ஆயத்தமாகிவிட்டேன்.



අක්කා: එන්න ත්‍රීවීලර් එක ආවා.
என்ன த்ரிவீலர் எக ஆவா.
அக்கா: வாருங்கள் முச்சக்கரவண்டி வந்துவிட்டது.

නංගි: හා... හා... යමු යමු.
ஹா...ஹா... யமு யமு
தங்கை: சரி... சரி... போவோம். போவோம்.

අක්කා: අපි මේ සාප්පුවෙන් හෑන්ඩ් බෑග් එකක් බලමු නේද නංගි.
அபி மே சாப்புவென் ஹேன்ட் பேக் எகக் பலமு நேத நங்கி.
அக்கா: நாங்கள் இந்தக் கடையில் கைப்பை ஒன்று பார்ப்போம் தங்கச்சி.

නංගි: හොඳයි අක්කේ.
ஹொந்தய் அக்கே.
தங்கை: நல்லது அக்கா.

මුදලාලි: එන්න නෝනා, මොනවද ඕනේ?
என்ன நோனா, மொனவத ஓனே?
வியாபாரி: வாருங்கள் அம்மா, என்ன வேண்டும்?

අක්කා: අපට හොඳ හෑන්ඩ් බෑග් එකක් ඕනේ.
அபட ஹொந்த ஹேன்ட் பேக் எகக் ஓனே.
அக்கா: எங்களுக்கு நல்லதொரு கைப்பை வேண்டும்.

මුදලාලි: ආ... නෝනා මේවා බලන්න.
ஆ... நோனா மேவா பளன்ன.
வியாபாரி: ஆ... அம்மா இவற்றைப் பாருங்கள்.



නංගි: අක්කේ මේක ලස්සනයි නේද?
அக்கே மேக லஸ்ஸனய் நேத?
தங்கை: அக்கா இது அழகானதுதானே?

අක්කා: ඔව් නංගි. මේක කීයද මුදලාලි?
ஒவ் நங்கி. மேக கீயத முதலாளி?
அக்கா: ஆம் தங்கச்சி. இது எவ்வளவு முதலாளி?

මුදලාලි: මේක රුපියල් පන්සීයක් වෙනවා නෝනා.
மேக ருபியல் பன்சீயக் வெனவா நோனா.
வியாபாரி: இது ஐந்நூறு ரூபா அம்மா.

අක්කා: වැඩියි මුදලාලි,ගණන් අඩු කරලා දෙන්න.
கணன் வெடிய் முதலாளி, கணன் அடு கறளா தென்ன.
அக்கா: விலை அதிகம் முதலாளி, விலையைக் குறைத்துத் தாருங்கள்.

මුදලාලි: රුපියල් හාරසිය පනහක් දෙන්නකෝ.
ருபியல் ஹாரசிய பனஹக் தென்னகோ.
வியாபாரி: நானூற்றி ஐம்பது ரூபா தாருங்கள்.

අක්කා: මෙන්න සල්ලි මුදලාලි.
மென்ன சல்லி முதுலாளி.
அக்கா: இதோ பணம் முதலாளி.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* தங்கச்சி நீங்கள் ஆயத்தமாகிவிட்டீர்களா?
නංගි ඔයා ලෑස්තිද?

i. முச்சக்கரவண்டி வந்துவிட்டது.
..............................................................................................

ii. இந்தக் கடையில் கைப்பை ஒன்று பார்ப்போம்.
..............................................................................................

iii. இது ஐந்நூறு ரூபா.
..............................................................................................






**Will** மற்றும் **going to** முதலான வினைச்சொற்களைக் கையாண்டு அமைக்கப்படுகின்ற எதிர்கால (உடன்பாடு நிலை) வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றி, அவற்றுடன் **When, How, Where** முதலான வினாச்சொற்களைக் கையாண்டால் அவை பின்வருமாறு அமைகின்றன.

(அ) When will you do that work?
நீ அந்த வேலையை எப்போது செய்வாய்?

(ஆ) When are you going to do that work?
நீ அந்த வேலையை எப்போது செய்யப் போகின்றாய்?

(இ) When will you buy that book?
நீ அந்தப் புத்தகத்தை எப்போது வாங்குவாய்?

(ஈ) When are you going to buy that book?
நீ அந்தப் புத்தகத்தை எப்போது வாங்கப் போகின்றாய்?

(உ) When will you give me the money?
நீ அந்தப் பணத்தை எனக்கு எப்போது தருவாய்?

(ஊ) When are you going to give me the money?
நீ அந்தப் பணத்தை எனக்கு எப்போது தரப் போகின்றாய்?

(எ) When will you bring my book?
நீ எனது புத்தகத்தை எப்போது கொண்டுவருவாய்?

(ஏ) When are you going to bring my book?
நீ எனது புத்தகத்தை எப்போது கொண்டுவரப் போகின்றாய்?

(ஐ) When will you make a kite?
நீ எப்போது பட்டம் ஒன்றைத் தயாரிப்பாய்?

(ஒ) When are you going to make a kite?
நீ எப்போது பட்டம் ஒன்றைத் தயாரிக்கப் போகின்றாய்?

---

(அ) When will you meet the manager?
நீ முகாமையாளரை எப்போது சந்திப்பாய்?

(ஆ) When are you going to meet the manager?
நீ முகாமையாளரை எப்போது சந்திக்கப் போகின்றாய்?

(இ) When will you finish that work?
நீ அந்த வேலையை எப்போது முடிப்பாய்?

(ஈ) When are you going to finish that work?
நீ அந்த வேலையை எப்போது முடிக்கப் போகின்றாய்?

(உ) When will you write that letter?
நீ அந்தக் கடிதத்தை எப்போது எழுதுவாய்?

(ஊ) When are you going to write that letter?
நீ அந்தக் கடிதத்தை எப்போது எழுதப் போகின்றாய்?

(எ) When will you clean this place?
நீ இந்த இடத்தை எப்போது சுத்தம் செய்வாய்?

(ஏ) When are you going to clean this place?
நீ இந்த இடத்தை எப்போது சுத்தம் செய்யப் போகின்றாய்?

(ஐ) When will you start that work?
நீ அந்த வேலையை எப்போது ஆரம்பிப்பாய்?

(ஒ) When are you going to start that work?
நீ அந்த வேலையை எப்போது ஆரம்பிக்கப் போகின்றாய்? **(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01. இந்தியாவில் வாழ்க்கைப் பண்பு பற்றித் தயாரிக்கப்பட்ட ஒரு திரைப்படம் 2008 இல் எட்டு ஒஸ்கார் விருதுகளைப் பெற்றது. இப்படத்திற்கு இசையமைத்தவர் யார்?



- i. இளையராஜா
- ii. தேவி ஸ்ரீபிரசாத்
- iii. A.R.ரஹ்மான்
- iv. ஹரிஸ் ராகவேந்திரா
- v. P.வாசுதேவன்

02. இலங்கையில் தொழிற்படுகின்ற மாகாண சபைகளின் எண்ணிக்கை;



- i. ஐந்து
- ii. எட்டு
- iii. ஏழு
- iv. ஆறு
- v. ஒன்பது

03. பின்வரும் கலைப்படைப்பாளிகளின் படைப்புக்களுக்கு இடையே இருக்கும் தொடர்பு அற்றது எது?

- i. மார்ட்டின் விக்கிரமசிங்க -நாவல்
- ii. ஜோர்ஜ் கித்- சிற்பம்
- iii. பேராசிரியர் எதிரிசிங்க - நாடகம்
- iv. கலாநிதி அமரதேவ - சங்கீதம்

04. போபால், செர்னோபில் நகரங்கள் எந்த வகையில் உலக மக்களின் கவனத்தை ஈர்த்தன?



- i. IIFA சினிமா விழா இந்த நகரங்களில் நடைபெற்றன.
- ii. சர்வதேச மாநாடுகள் இந்த நகரங்களில் நடைபெற்றன.
- iii. உலகப் புகழ்பெற்ற வழக்குகள் இந்த நகரங்களில் நடைபெற்றன.
- iv. அணு உலைகள் வெடித்தமையால் கவனத்தை ஈர்த்தன.
- v. புவி நாடுக்கத்தால் இந்நகரங்களில் வாழ்ந்தவர்கள் பலர் பலியாகினர்.

05. இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல வெளிநாடுகள் முன்வந்தன. இதற்காக பல நாடுகளின் தலைவர்கள், தூதுவர்கள், அமைச்சர்கள் விசேட பிரதிநிதிகள், அதிகாரிகள் விஜயம் செய்தனர். அந்த வகையில், 2010 ஜூன் வரை 20 முறை இலங்கைக்கு விஜயம் செய்த ஒரு நாட்டின் விசேட தூதுவரின் பெயர் என்ன?

- i. லின்பாஸ்கோ
- ii. பான் கீ மூன்
- iii. சமந்தா பவர்
- iv. யசூசி அகாசி
- v. நவநீதன்பிள்ளை

06. அவுஸ்திரேலியாவில் 2009 இல் நடைபெற்ற 'ஏஷஸ்' கிரிக்கெட் தொடரை 20 வருடங்களின் பின்னர் வெற்றிகொண்ட நாடு?



- i. அவுஸ்திரேலியா
- ii. நியூஸிலாந்து
- iii. இங்கிலாந்து
- iv. இந்தியா
- v. தென் ஆபிரிக்கா

07. 1960 முதல் உலக ஜனநாயக தினம் ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் 15 இல் நினைவு கூரப்படுகின்றது. 2009 இல் உலகில் சிறந்த ஜனநாயக நாடுகளாக பின்வருவனவற்றில் சிறந்த முதல் மூன்று நாடுகள் கொண்ட வரிசை எது?

- i. இந்தியா, இலங்கை, இங்கிலாந்து
- ii. அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய அமெரிக்கா
- iii. பிரான்ஸ், ஜப்பான், கனடா
- iv. மலேசியா, இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா
- v. நோர்வே, சுவீடன், அயர்லாந்து

08. சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பின் தலைவராக 2009 வரை கடமையாற்றியவர் முகமத் எப்ராடி என்பவராவார். இவரின் பின் புதிய தலைவராகத் தெரிவானவர் ஜப்பானைச் சேர்ந்தவராவார். இவரின் பெயர்;



- i. யுகியே அமானோ
- ii. பர்விஸ் முசாரத்
- iii. டோனி பிளேயர்
- iv. நவநீதன்பிள்ளை
- v. மஹதீர் முஹம்மட்

09. உலகில் சக்திமிக்க பெண்கள் வரிசையில் இருப்போரை போபஸ் நிறுவனம் காலத்திற்கு காலம் வெளியிடுகின்றது. அந்தவகையில், 2009 இறுதியில் உலகில் சக்தி மிக்க பெண்கள் 100 பேரில் முதலாமிடத்தில் இருப்பவர்.

- i. திருமதி மிச்செல் ஒபாமா
- ii. திருமதி ஹிலரி கிளின்டன்
- iii. திருமதி என்சாலா மார்கேல்
- iv. திருமதி குளோரியோ மகவல் அரயோ
- v. பிரதீபா பட்டீல்

**கடந்த 07.10.2010 இதழின் விடைகள்**

| | | |
|---|---|---|
| 01. ii | 05. v | 08. i |
| 02. iii | 06. v | 09. v |
| 03. i | 07. v | 10. ii |
| 04. ii | | |

# ஒபாமாவின் பிள்ளைப்பருவம் திரைப்படமாக...



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பிள்ளைப்பருவத்தையொட்டிய திரைப்படமொன்று இந்தோனேஷியாவில் திரையிடப்பட்டுள்ளது. 'ஒபாமா த மென்டென்க் கிட்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த திரைப்படமானது, 1967 ஆம் ஆண்டு தொடக்கம் 1971 ஆம் ஆண்டு வரை ஒபாமா இந்தோனேஷியாவில் வாழ்ந்த காலப்பருவத்தை அடியொட்டியே, தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவின் திரைப்பட நிறுவனமொன்றினால் தயாரிக்கப்பட்டுள்ள இத்திரைப் படத்தில், ஒபாமாவின் பாத்திரத்தில் 12 வயதுடைய அமெரிக்காவைச் சேர்ந்த ஹஸான் ஷருக் என்ற சிறுவன் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# கிர்கிஸ்தானின் புதிய ஜனாதிபதியாக ரோசா

கிர்கிஸ்தானின் புதிய ஜனாதிபதியாக ரோசா ஒட்டும்பயேவா பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.



முன்னதாக ஜனாதிபதியாகப்பதவி வகித்த குர்மன்பெக் பக்கியெவ்வின் ஆட்சியின்மீது அதிருப்தி தெரிவித்து, கடந்த ஏப்ரல் மாதம் எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து அவரது ஆட்சியைக் கவிழ்த்ததையடுத்தே, இடைக்கால ஜனாதிபதியாக ரோசா ஒட்டுப்பயேவா தெரிவுசெய்யப்பட்டார். இவர் வெளிநாட்டமைச்சராக முன்னர் பதவி வகித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் ஆட்சிக்குட்பட்டிருந்த கிர்கிஸ்தானில் மட்டுமன்றி, மத்திய ஆசிய வலய நாடொன்றில் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள முதல் பெண் என்ற பெருமையையும் ரோசா ஒட்டும்பயேவா பெறுகின்றார்.

பலவிதமான அரசியல் சிக்கல்களுக்குள் சிக்கியுள்ள கிர்கிஸ்தானில் நல்லதோர் புதிய யுகத்தைத் தோற்றுவிப்பதே தனது திட்டம் என்று புதிய ஜனாதிபதி ரோசா குறிப்பிட்டுள்ளார்.

# 'கராட்டே கிட்' புதிய பதிப்பிற்கு ஆஸியில் எதிர்ப்பு...

1984 ஆம் ஆண்டளவில் உலகம் பூராவும் பிரபல்யம் பெற்றிருந்த 'கராட்டே கிட்' திரைப்படம் சில மாற்றங்களுடன் மீள் தயாரிப்பாக மீண்டும் வெளியாகியுள்ளது. எனினும், இந்த புதிய 'கராட்டே கிட்' திரைப்படத்திற்கு அவுஸ்திரேலியாவில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திரைப்படத்திலுள்ள சண்டைக் காட்சிகள் சிறுவர்களுக்கு உகந்ததாக இல்லை என்று கூறியே மேற்படி எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. அவுஸ்திரேலியாவின் சிறுவர் நல விவகார கவுன்ஸிலும் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

பிரபல ஹொலிவூட் நடிகர் 'வில் ஸ்மித்'தின் 12 வயதுடைய மகன் ஜேடன் ஸ்மித்தும் பிரபல நடிகர் ஜெக்கிசானுமே இந்தப் புதிய 'கராட்டே கிட்' திரைப்படத்தில் நடித்துள்ள பிரதான நடிகர்களாவர்.

சிறுவர்களுக்குப் பொருந்தாத வகையிலும் பெரியவர்களுக்குப் பொருந்தும் வகையிலுமான சண்டைக் காட்சிகளே அதிகம் இதில் இருப்பதால் இத்திரைப்படமானது பெரியவர்களுக்கு மட்டுமேயான திரைப்படமாகவே கருதமுடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும், அதிகூடிய வன்முறைகளைக் கொண்டதாக இத்திரைப்படம் அமைந்திருப்பதாலேயே இதற்கு பெருமளவில் எதிர்ப்பு தெரிவிக்கப்படுவதாகவும் கருதப்படுகின்றது.

**அற்லஸ் கேள்வி - 264**

**கேள்வி:** ஒபாமாவின் கதாபாத்திரத்தில் நடிக்கும் சிறுவனின் பெயர் என்ன?

சரியான விடை...............................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 264,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 262 இன் சரியான விடை: பிரிட்டன்**

**பரிசு பெறுவோர்**

மோ.சுலக்ஷி,
475, பிரதான வீதி, மாத்தளை.

எஸ்.ஜே.ஷெரின் தம்மிக்கா,
49/A, கல்பிட்டி வீதி, மாம்பூரி.

கர்ஜனா தவனேசன்,
207/2, ஆடியபாதம் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.

# முரளியின் ஓய்வை முன்னிட்டு காலியில் விசேட வைபவங்கள்



இலங்கை கிரிக்கெட் அணியின் சுழல் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் டெஸ்ட் போட்டிக் களத்திலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

டெஸ்ட்டிலிருந்து ஓய்வு பெற்றாலும் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் இலங்கை சார்பாக ஒரு கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கும் தயாராக இருப்பதாக முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு கிடைத்துள்ள அரிய கிரிக்கெட் பொக்கிஷமாக கருதப்படுகின்ற முரளிதரன் ஓய்வு பெறுவது இலங்கை டெஸ்ட் அணிக்குப் பாரிய இழப்பாக இருக்கும் என்றே கருதப்படுகின்றது.

ஜூலை 18 ஆம் திகதி காலியில் இந்திய அணிக்கு எதிராக நடைபெறவுள்ள போட்டியே முரளியின் கடைசி டெஸ்ட் போட்டியாக அமையவுள்ளது.

இதுவரை டெஸ்ட் போட்டிகளில் 792 விக்கெட்களையும் ஒருநாள் போட்டிகளில் 515 விக்கெட் களையும் கைப்பற்றியுள்ள முரளிதரனே உலகில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் கூடிய விக்கெட் களைப் பெற்றவர் என்ற சாதனைக்குரியவராகவும் உள்ளார். இருப்பினும், டெஸ்ட்டில் 800 விக்கெட்களைப் பெற்ற முதலாமவர் என்ற சாதனையையும் தனதாக்கிக் கொள்ளும் ஆர்வத்தையும் முரளி கொண்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

நாள் போட்டிகளில் கலந்து கொள்வதற்கும், அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்

1992 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுடன் கொழும்பு ஆர்.பிரேமதாஸ அரங்கில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியே முரளியின் முதலாவது டெஸ்ட் போட்டியாகும்.

மேலும், 1996 ஆம் ஆண்டில் உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்ட இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த வீரர்களில் தற்போதும் இலங்கை அணியில் நீடித்திருக்கும் ஒரே வீரர் முரளிதரன் மட்டுமே என்பதும் குறிப்பிடத் தக்கது.

முரளிதரனின் ஓய்வை முன்னிட்டு காலி மைதானத்தில் விசேட வைபவங்களை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இதுவரை முரளிதரன் 132 டெஸ்ட் போட்டிகளில் போட்டியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## "முரளி சிறந்த பந்து வீச்சாளர்"

**-முன்னாள் ஆஸி பிரதமர்**



முரளிதரனின் பந்து வீச்சானது விதிமுறைகளுக்கு மாறாக அமைந்திருப்பதாக பல வருடங்களுக்கு முன்னர் முரளிதரனை விமர்சித்திருந்த அந்நாளைய அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹவார்ட் தற்போது தனது அந்த அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளார். இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஜோன் ஹவார்ட் "முரளிதரன் உண்மையிலேயே சிறந்தவொரு பந்து வீச்சாளன் என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேன். உலகிலேயே கூடிய விக்கெட்களைப் பெற்ற சாதனையாளராக அமைந்துள்ளதையிட்டும் அவரை வாழ்த்துகின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

முரளிதரனின் பந்து வீச்சானது விதிமுறைகளுக்கு மாறாக இருப்பதாக ஜோன் ஹவார்ட் உட்பட அவுஸ்திரேலிய வீரர்கள் சிலரும் குற்றம் சாட்டியதால் முரளியின் பந்து வீச்சு பாணி குறித்து வீடியோ காட்சிகளில் நுணுக்கமாக ஆராயப்பட்டு அவரது பந்து வீச்சில் தவறு ஏதும் கிடையாது என்று தீர்ப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கை-இந்திய டெஸ்ட்டில்

## நடுவரின் தீர்ப்பை அப்பீல் செய்யமுடியாதாம்...!

*இம்மாதம் (ஜூலை) 18 ஆம் திகதி காலியில் ஆரம்பமாகின்ற இலங்கை-இந்திய டெஸ்ட் கிரிக்கெட் தொடரின்போது,* நடுவரின் தீர்ப்பை மீள்பரிசீலனைக்கு கோரி தொலைக்காட்சி வழியே தீர்ப்பைப்பெறும் முறை, அமுல்படுத்தப்படமாட்டாது என்று தெரியவருகின்றது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கோரிக்கையின் பேரிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து அனைத்து டெஸ்ட் போட்டிகளிலும் இவ்வாறான மூன்றாம் நடுவரின் தீர்ப்பைக் கோரும் வழிமுறை ஐ.சி.சியினால் கட்டாயமாக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கடந்த வருடம் இறுதிப் பகுதியில் இந்தியாவில் நடைபெற்ற இந்தியா-இலங்கை டெஸ்ட் தொடரில் இந்த வழிமுறை பின்பற்றப்படவில்லை. அப்போது, இதற்குக் காரணம் கூறிய இந்திய கிரிக்கெட் சபை தொலைக்காட்சி நிறுவனங்கள் இதற்கான செலவை பொறுப்பேற்க மறுத்ததன் காரணத்தினாலேயே அதனை அறிவித்தது



முடியவில்லை என்று தெரிவித்திருந்தது. ஆனால், இந்திய கிரிக்கெட் வீரர்களின் வேண்டுகோளின் பேரிலேயே மூன்றாம் நடுவரிடம் அப்பீல் செய்யும் வழிமுறை பின்பற்றப்படவில்லை என்றும் ஒரு தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, 2008 ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் இலங்கை வெற்றியீட்டுவதற்கு இந்த மூன்றாம் நடுவரிடம் அப்பீல் செய்யும் நியாயமான வழிமுறையே காரணமாக அமைந்தது என்றும் இலங்கைத் தரப்பிலிருந்து சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் இம்முறை நடக்கவுள்ள போட்டி இலங்கையில் நடைபெறுகின்ற நிலையிலும் மூன்றாம் நடுவரிடம் கோரிக்கைக்கு விடப்படும் வழிமுறை ஏன் நடைமுறைப் படுத்தப்படப் போவதில்லை என்பது கேள்விக்குறியாக இருப்பதாகவே கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

## "முடிந்த அனைத்தையும் அணிக்கு வழங்கினேன்"

**-மெரடோனா**

ஆர்ஜன்டீனா கால்பந்தாட்ட அணியின் பயிற்றுனரான மெரடோனா பதவி விலகும் சாத்தியம் இருப்பதாக அவர் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் காலிறுதி வரை முன்னேறி பின்னர் ஜேர்மனியிடம் தோல்வியைத் தழுவி அரையிறுதி வாய்ப்பை ஆர்ஜன்டீனா இழந்தமை நாம் அறிந்ததே.



ஆர்ஜன்டீனா இம்முறை கிண்ணத்தைக் கைப்பற்றுவது உறுதி எனும் பாணியிலேயே மெரடோனா கருத்துக்களைத் தெரிவித்து வந்தார். இருந்தாலும், தோல்வியானது அவரை பெரிதும் பாதித்துவிட்டதாகவே கருதப்படுகின்றது.

"என்னால் முடிந்த அனைத்தையும் அணிக்கு வழங்கினேன். என்றாலும் எனது எதிர்பார்ப்பு பொய்த்துவிட்டது" என்று தெரிவித்துள்ள மெரடோனா தனது குடும்பத்தாருடன் கலந்து பேச வேண்டியிருப்பதாகவும் அதன்பின்னர் உரிய முடிவை அறிவிக்கவுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலோகங்கள்: பலன்களும் பலவீனங்களும்

**பூமியில் ஏராளமான உலோகங்கள் பதிந்து-குவிந்து கிடக்கின்றன. அவற்றில் தங்கம், வெள்ளி, ஈயம், செம்பு, இரும்பு போன்றவை நம் மத்தியில் பிரபலமானவை. உலோகங்கள் மின்கடத்தல் மற்றும் வெப்பக் கடத்தல் திறன்கொண்டவை. அன்றாட வீட்டுப் பாவனைப் பொருட்களில் இருந்து ஆரம்பித்து மருத்துவப் பொருட்கள், உர வகைகள், ஆயுதங்கள், அலங்காரப் பொருட்கள் என நமது சகல தேவைகளிலும் வெவ்வேறு விதங்களில் உலோகங்கள் பயன்பட்டுக்கொண்டிருக்கின்றன.**

உலோகங்களில் ஒவ்வொன்றும் நிறத்திலும் வடிவத்திலும் செயற்பாட்டிலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டுக் காணப்படுகின்றது.





தங்க அகழ்வு




உலோக வேலைகள்

தங்கம், வெள்ளி போன்ற உலோகங்கள் நிலத்தில் எங்காவது ஓரிடத்தில் இருக்கின்றபோதும் சோடியம், கல்சியம் போன்ற உலோகங்கள் வேறொரு மூலகத்துடன் இணைந்தே உருவாகின்றன. அவ்வாறான உலோகங்கள் விரைவில் தாக்கங்களுக்கும் உட்படுகின்றன. சில உலோகங்களை உள்ளடக்கிய சேர்வையை சூடாக்கும்போது பல்வேறு நிறங்கள் தோன்றுகின்றன. அப்போது, நிறத்திற்கேற்ப உலோகங்களை அடையாளம் காணமுடியும்.

பண்டைக்காலம் முதற்கொண்டே, பல்வேறு நாணயங்களை செய்வதற்கும் உலோகங்கள் பயன்படுத்தப்பட்டன. வெள்ளி, தங்கம்,செம்பு என்பன இவ்வாறு பயன்படுத்தப்பட்ட உலோகங்களாகும். சில சந்தர்ப்பங்களில் நாணயங்கள் செய்வதற்கு செம்பு, நிக்கல் போன்ற உலோகங்கள் பயன்படுத்தப்பட்டன. நிக்கலானது பொருட்களுக்குப் பளபளப்பைத் தரக்கூடியது. அந்தவகையில், உலோகங்கள் சிலவற்றைப் பற்றி தெரிந்துகொள்வோம்.



இயல்பான தங்கம்



தங்க ஆபரணங்கள்

## தங்கம்

மென்மையான, மஞ்சள் நிறமுள்ள, வார்ப்பதற்கு எளிதான ஓர் உலோகமாகும். பொதுவாக ஆபரணங்கள் செய்வதற்கு இது உபயோகப்படுத்தப்படுகிறது. இது பெறுமதி மிக்க ஓர் உலோகமாகும். தங்கம் நீண்ட காலம் பாவிக்கக் கூடியதாக இருப்பதோடு, மாற்றங்களுக்கு உள்ளாகாமல் என்றும் சேதமேற்படாது நிலைத்திருக்கின்றது. எனவே, பலர் தமது ஆபரணங்களைத் தங்கத்திலேயே செய்கின்றனர். அத்துடன், தங்கத்திற்கான கேள்வி அதிகரிக்கும்போது அதன் விலையும் உயர்கின்றது.



இயல்பான செம்பு

## வெள்ளி


இது அதிக மின்கடத்தல் திறன் கொண்டது. அதிக விலையுடையது. தங்கத்தினை விடச் சற்று கடினமான உலோகமாகும். ஆபரணங்கள், நாணய தயாரிப்புகளுக்கு பெருமளவு பயன்படுகின்றது.

## செம்பு

இது 'தாமிரம்' எனவும் அழைக்கப்படுகிறது. சிவந்த நிறத்தில் இருப்பதால் 'செம்பொன்' என்றும் அழைக்கப்படுகின்றது. இது வளிமண்டல ஒட்சிசனுடன் தாக்கமுற்று கருமைநிற செப்பொட்சைட்டைத் தரும். மின்சாரத்தையும் வெப்பத்தையும் நன்கு கடத்தும்.

## வெண்கலம்

மனிதன் தன் சுயதேவைக்கு அமைய இரு உலோகங்களைப் பயன்படுத்திப் பல்வேறு உபகரணங்களைச் செய்கிறான். அவற்றில் ஒன்று தகரம். மற்றையது செம்பு. இவ்விரண்டையும் சேர்த்தே வெண்கலம் உருவாக்கப்படுகின்றது. வெண்கலம் நீண்ட நாட்களுக்கு பாவனையில் இருக்கக்கூடியது.



செம்பு உற்பத்திகள் சில



உலோக நாணயங்கள்

## அலுமினியம்

பூமியில் அதிகம் கிடைக்கக்கூடிய உலோகம் அலுமினியமாகும். அது பலம் வாய்ந்தது. பயன்பாட்டுக்கும் இலகுவானது. ஒக்சிஜனுடன் தாக்கம் அடைவது குறைவு. அலுமினியப் பொருட்களின் பாவனை மிகவும் ஆபத்தானதென ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. எப்போதும் குடிநீரை சேகரித்து வைப்பதற்கும் உணவு சமைப்பதற்கும் அலுமினியப் பாத்திரங்களை பாவிப்பதைத் தவிர்த்து, மண் பாத்திரத்தைப் பயன்படுத்துவது சிறந்ததாகும்.அது சிறந்த உடல்நலத்திற்கு வழிவகுக்கும். அலுமினியப் பாத்திரங்கள் மட்டுமன்றி, வேறு சில உலோகங்களும் உடல் நலத்தைப் பாதிக்கும்.



அலுமினியப் பாத்திரங்கள்



இயல்பான அலுமினியம்



இயல்பான ஈயம்

## ஈயம்

பண்டைய ரோமில் நீர்க்குழாய்கள் ஈயத்தால் உருவாக்கப்பட்டிருந்தன. சில வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துப்படி; ரோமானியர்கள் பலர் ஈயத்தினால் ஏற்பட்ட விஷம் காரணமாக உயிரிழந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது. ஈயம் உடலுக்குள் சென்றால் அது குருதியுடன் கலந்து விடுகிறது. அவ்வாறு கலக்கும் ஈயம் உடல் முழுவதும் பரவி விடுகிறது. மூளை, தலை மற்றும் உடலின் ஏனைய உறுப்புக்கள் இதனால் பாதிப்புக்கு உள்ளாகின்றன.

விவசாயத்திற்கு உபயோகப்படுத்தும் ரசாயனப் பொருட்கள், தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் ரசாயனப் பொருட்கள் என்பனவற்றிலும் ஈயம் கலந்துள்ளது. பாவனையின் பின்னர் கழிவுகளாக வெளியிடப்படும் ஈயம் நீருடன் கலக்கின்றது. இவ்வாறான நீர்நிலைகளில் வாழும் மீன்களை உட்கொள்வதன் மூலமும் உயிராபத்து ஏற்படலாம்.

## பாதரசம்

திரவ நிலையில் உள்ள ஓர் உலோகம் ஆகும். பாதரசம் வெண்மை நிறமுடையது. பூச்சி மருந்துகள், இலத்திரனியல் உபகரணங்கள், மின்குமிழ் ஆகியவற்றின் உற்பத்தியில் பாதரசம் பயன்படுத்தப்படுகின்றது. பாதரச கூட்டுப் பொருட்கள் மருத்துவப் பயன்களைக் கொண்டுள்ளன. எனினும், இது விஷத்தன்மை மிக்கது.


உலகிலேயே மிக மோசமான ஆறு வகையான நஞ்சுகளில் பாதரசமும் ஒன்று என ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. பாதரசம் கலக்கப்பட்ட நீரைக் குடித்தால் நரம்பு மண்டலம் பாதிப்படைகின்றது. மேலும், சுவாச மண்டலமும் சிறுநீரக மண்டலமும் மெல்ல மெல்லச் செயல் இழக்கும் அபாயமும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாசங்களில் அடையாளமிடுக

3





1

அ) செவ்வகங்களை நீலத்தில் நிறந்தீட்டுங்கள். எத்தனை செவ்வகங்கள் உள்ளன?

.............................................

ஆ) வட்டங்களை பச்சையில் நிறந்தீட்டுங்கள். எத்தனை வட்டங்கள் உள்ளன?

.............................................

இ) முக்கோணிகளை மஞ்சளில் நிறந்தீட்டுங்கள். எத்தனை முக்கோணிகள் உள்ளன?

.............................................




தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.07.21 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 269**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## சேர்த்தெழுதுக

4

1. நீலம்+நிறம் - ..............................
2. பச்சை+கொடி - ..............................
3. தேன்+ஆறு - ..............................


## இடைவெளியை நிரப்புக

5

1. XIII, ........, ........, XVI
2. ........., ..........., XXXVI, XXXVII

2

(i) 'ee' சத்தம் வெளிப்படும் படங்களில் வட்டமிடுக




(ii) 'ea' சத்தம் வெளிப்படும் படங்களில் வட்டமிடுக




## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 266 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
வி.ஜே.சஞ்சு,
56, உனம்புவ வீதி, கம்பளை.

**போட்டி: 02**
ஸஹ்ரா முஹ்சீன்,
28/1, எண்டர்சன் வீதி, களுபோவில.

**போட்டி: 03**
ஜியாத் அஹமட்,
176/2, அங்குருவல்ல வீதி, கணிதபுர.

**போட்டி: 04**
எம்.தஸ்னீம்,
61/20, பைதுல் ஹம்த்,
காத்தான்குடி-06.

**போட்டி: 05**
சர்வேஸன்,
79/2, ஆதர்ஷநிவாச வீதி, மாவில்மட.

### பாராட்டுப் பெறுவோர்

- ச.டயானந்தா, நீராவியடி, யாழ்ப்பாணம்.
- ஃபாயிக் முஸம்மில், பலாங்கொட.
- ஆர்.பிரசாத், வெல்லம்பிட்டி.
- ஆர்.அஜந்தன், நோர்வூட்.
- ஏ.ஆர்.நஸீத், தம்பலகாமம், திருகோணமலை.
- எஃப்.திக்ரா, ஏறாவூர்-03.
- ஆர்.நிரஞ்சன், கொழும்பு-15.
- நூருல் ஹஃபியா, வெலிகம.
- சி.கௌசல்யா, மத்துகம.
- [illegible]

## அறிவுக்கு விருந்து 266 விடைகள்

**போட்டி: 01**

சரியான எண்ணிக்கை - 6

**போட்டி: 02**



**போட்டி: 03**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 6 | ■ | 9 | 4 | 5 |
| 6 | ■ | 2 | 6 | 2 | ■ | 1 |
| 2 | 6 | 8 | ■ | 9 | 2 | 2 |
| ■ | 4 | ■ | ■ | ■ | 2 | ■ |
| 9 | 1 | 1 | ■ | 7 | 2 | 2 |
| 2 | ■ | 6 | 4 | 5 | ■ | 3 |
| 7 | 4 | 8 | ■ | 9 | 4 | 4 |

**போட்டி: 04**

1. despite
2. mariner
3. agreement
4. rumour

**போட்டி: 05**

1. பலா - மூசு
2. தென்னை - குரும்பை
3. வாழை - கச்சல்
4. பனை - நுங்கு




'**ஆ**திகால உறைவிடம்', 'ரோமப் பேரரசின் வரலாறு' என்பன மிகவும் பயனுள்ளதாக அமைந்தன. 'சங்கிலி மன்னன்' வரலாற்றுத் தொடரை ரசித்துப் படித்தேன். ஏனைய ஆக்கங்களும் வரவேற்கத் தக்கன.

**-எஸ்.நந்தினி, தரம்-7, ரஜவலை இ.தே.கல்., அம்பாக்கோட்டை.**

**ச**ங்கிலியின் பிறப்பை மிகவும் எளிதாக அறிந்துகொண்டேன். விண்வெளி சென்ற வீரர்களின் பிறப்பு, இறப்பு, சாதனைகள் பற்றி அறியத் தந்தமைக்கு நன்றி.

**-எஃப்.றுஸ்டா, தரம்-8^C, அல்-ஹிக்மா கல்., கொழும்பு-12.**

'**ச**ங்கிலி மன்னனின் வரலாற்றுத் தொடர்' எமது பாடத்திட்டத்துடன் தொடர்புடையதால் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். 'ரோமப் பேரரசின் வரலாறு', 'விண்வெளி சென்ற வீரர்கள்' போன்றவையும் என்னைக் கவர்ந்தன. **-த.கர்ஜனா, ஆடியபாதம் வீதி, நல்லூர்.**

**வி**ண்வெளியைப் பற்றித் தெரிந்துகொள்வது மட்டும் போதாது; அங்கு சென்றவர்களையும் அறிய ஆவலாக இருந்தேன். அதை 'விஜய்' நிறைவேற்றிவிட்டது.

**-எம்.அஃப்ராஸ், ஹுசைனியாபுரம், புத்தளம்.**

'**வி**ண்வெளி சென்ற வீரர்கள்', 'மூக்குக்கொம்பன்', 'சங்கிலி மன்னன் தொடர்' என்பன என்னைக் கவர்ந்தவை.

**-இ.ஜீவா, சீனக்குடா.**




'**அ**றிவுக்கு விருந்து' புதிய பயிற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், இப்போட்டியினூடாக வெற்றியையும் பாராட்டுக்களையும் பெற்று மிகவும் உற்சாகமடைந்துள்ளேன். என்னைப் போன்ற சக மாணவர்களுக்கும் இப்பகுதி அறிவுக்கு விருந்தளிப்பதாக அமைந்துள்ளது.

**-ஜே.சார்ள்ஸ், மகா ஊவா, வலப்பனை.**

'**வி**ண்வெளி சென்ற வீரர்கள்', 'ரோமப் பேரரசு', 'நேர முகாமைத்துவம்' என்பன மிகவும் அற்புதம். இவ்வாறு பல தகவல்களை எமக்குத் தொடர்ந்தும் தர வாழ்த்துக்கள்.

**-எஃப்.ஃபர்ஹா, தரம்-11, மெதடிஸ்ட் கல்., கந்தப்பளை.**

'**ரோ**மப் பேரரசு' என்னை மெய்சிலிர்க்க வைத்தது. 'ஜெங்கிஸ்கான்' வரலாறோ என்னைக் கவர்ந்துவிட்டது. 'விண்வெளி வீரர்கள்' பற்றி வாசிக்கையில் எனது எண்ணங்கள் சந்திரனையும் தாண்டிச் சென்றுவிட்டன. மாணவர்களின் கல்வித்தோழன் 'விஜய்'.

**-ப.கஜமாலன், தரம்-11^D, யாழ்.இந்துக் கல்., யாழ்ப்பாணம்.**

'**வி**ஜய்' பத்திரிகைக்கு சிறுகதைத் தொடர் ஒன்றை எழுத வேண்டும் என்பது எனது நீண்டகால அவா. 'விஜய்'யின் அனுமதியைக் கோருகின்றேன். **-எஃப்.ரிமாஸா, நுவரெலியா வீதி, பொறகஸ்.**

***★ விஜய்க்கு ஆக்கங்களை எழுதி அனுப்புவதற்குத் தயங்க வேண்டாம். வாசகர்களின் ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன. அவற்றின் தரங்கண்டு பிரசுரிப்பதற்கும் தரமான ஆக்கங்களுக்கும் விஜய்யில் என்றும் களமுண்டு. (ஆ-ர்)***

**பு**துமையான, பயன்தரும் ஆக்கங்களைத் தாங்கி வரும் விஜய்க்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். 'விண்வெளிக்குச் சென்ற வீரர்கள்' பற்றிய தகவல்கள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்திருந்தன. 'சங்கிலி மன்னன்' பற்றிய வரலாற்றுத் தொடர் பாராட்டத்தக்க அம்சம்.

**-ஸாலிம் அஹ்மட், கெலிஓய வத்த, கெலிஓய.**

இந்த இதழில் (14.07.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 21.07.2010.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
வாசகர் மடல்,
'விஜய்'
த.பெ.எண் 2037,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வரலாற்றில் சங்கிலி மன்னன்



வரலாற்றுத் தொடர்... 03

அரியாலையூர் சி.சிவதாசன்

ஒருநாள் ஆதவன் மேற்கு திசைநோக்கிச் பயணிக்கும் நேரம் யானையொன்று மதங்கொண்டு அரண்மனை வீதியில் தன்னிச்சையாக ஓடிவந்தது. கண்டோர் அஞ்சி நடுங்கி ஓடினர்.

## சங்கிலியின் துணிச்சல்



அவ்வேளையில், அங்கே வீதியில் நின்ற இளவரசன் சிங்கவாகுவை அது தாக்குவதற்கு மிக நெருங்கி வந்தது.

அரண்மனை வீதியில் மதங்கொண்டு வந்த யானை இளவரசன் சிங்கவாகுவை தாக்குவதற்கு நெருங்கி வருவதைக்கண்ட சங்கிலி பாய்ந்து அதனருகில் சென்று யானையை வேலால் தாக்கி அண்ணன் சிங்கவாகுவைக் காப்பாற்றினான். மிகத் துணிச்சலாகச் செயற்பட்ட சங்கிலியின் வீரத்தை மெச்சினர் மக்கள். அவனின் அஞ்சாமை கண்டு ஆச்சரியமடைந்தனர். மன்னன் ஆனந்தக் கண்ணீர் சிந்தினான். அவனது சுற்றத்தாரும் இதுகுறித்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். இளவரசன் சிங்கவாகு ஆனந்த மிகுதியால் சங்கிலியைத் தன் மார்போடு அணைத்து முத்தமிட்டான். இந்தக் காட்சியானது அனைவர் நெஞ்சையும் ஒருகணம் மெய்மறக்க வைத்தது.

நாட்கள் பல ஓடி மறைந்தன. விதி வேறு வடிவத்தில் தன் விளையாட்டைக் காட்டுமென்று யார்தான் நினைத்திருப்பார்கள். சங்கிலியால் உயிர் பிழைத்த சிங்கவாகு தந்தையோடு சேர்ந்து இனிதே ஆட்சி புரிந்து வரும் நாட்களில் அன்றொரு நாள் எங்கிருந்தோ காலன் நஞ்சுருவில் வந்து அவனுயிரைக் கவர்ந்து சென்றான். சோதிடம் சரியாகக் கணிக்கப்படின், எப்பொழுதும் அது பொய்ப்பதில்லை என்பதற்கு இதுவோர் எடுத்துக்காட்டானது. இந்நிகழ்வானது எப்படி நடந்தது என்பது யாருக்கும் புரியாத புதிராகவே இருந்தது. மன்னன் பரராசசேகரன் செய்வதறியாது துடித்தான். அங்கம் எல்லாம் நொந்துருகி அழுதான். சுற்றத்தார், நாட்டு மக்கள் அனைவரும் கதறிக் கண்ணீர் வடித்தனர். நாட்கள் பல கடந்தன. மன்னன் பரராசசேகரன் தன் இரண்டாவது புதல்வனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி மூத்த மகன் இறந்த சோகத்திலிருந்து ஓரளவு விடுபட்டுக்கொண்டிருந்தான். இரண்டாவது புதல்வனாகிய பண்டாரம் ஆட்சிப் பொறுப்பினைத் தந்தையுடன் இணைந்து சீரும் சிறப்புமாகப் பரிபாலனம் செய்து வந்தான். அவனின் ஆட்சிச் சிறப்பினைக் கண்டு மக்கள் அவன்மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார்கள்.

**சங்கிலியால் உயிர் பிழைத்த சிங்கவாகு தந்தையோடு சேர்ந்து இனிதே ஆட்சி புரிந்து வரும் நாட்களில் அன்றொரு நாள் எங்கிருந்தோ காலன் நஞ்சுருவில் வந்து அவனுயிரைக் கவர்ந்து சென்றான். சோதிடம் சரியாகக் கணிக்கப்படின், எப்பொழுதும் அது பொய்ப்பதில்லை என்பதற்கு இதுவோர் எடுத்துக்காட்டானது**

மன்னன் பரராசசேகரனின் இரண்டாவது மனைவியின் மகன் பரநிருபசிங்கன் வைத்தியத்துறையில் பேர் பெற்று விளங்கினான். அவன் சிறப்பு இலங்கை நாட்டின் ஏனைய மன்னர்களுக்கிடையேயும் பெரும் பிரபல்யம் பெற்றிருந்தது. கண்டி நாட்டு மன்னன் தன் மனைவிக்கு ஏற்பட்ட நோயினைத் தீர்க்க பரநிருபசிங்கனை தனது நாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்தான். பரநிருபசிங்கன் கண்டி மன்னனின் அழைப்பை ஏற்று அங்கு சென்றான். கண்டி மாநகர் நோக்கி பரநிருபசிங்கன் புறப்பட்ட அந்நாள் மீண்டும் ஒரு துர்ச்சம்பவம் நல்லூர் நகரில் இடம்பெற்றது.

(தொடரும்...)

# ஆழ்கடல் மூழ்கு வீரர்கள்

ஆழ்கடல் மூழ்கு வீரர்களின் பணி என்ன? ஆழ்கடலுக்குள் எண்ணெய், எரிவாயுக் குழாய்களைப் பதித்தல், கண்டங்களுக்கு இடையே கோள்களைப் பதித்தல் அவற்றைப் பராமரித்தல் போன்றவை ஆழ்கடல் மூழ்கு வீரர்களின் பணியாகும். அத்துடன், கடலுக்கு மேல் பாலம் அமைக்கவும், மூழ்கிய கப்பல்களையும் அதில் உள்ளவர்களையும் மீட்கவும் ஆழ்கடல் மூழ்கு வீரர்களின் உதவி





தேவைப்படுகிறது. கடல் உயிரினச் சூழல் பற்றிய ஆய்வுக்கு விஞ்ஞானிகள் அவர்களைப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

'பெல் டைவிங்' எனப்படும் ஆழ்கடல் மூழ்கு பயிற்சியை 50 மீற்றர் கடல் ஆழத்தில் பெறுவதற்கு அவுஸ்திரேலியா அல்லது நோர்வே நாட்டுக்குச் செல்ல வேண்டும். அறிவியல் பாடத்தில் சித்தி நீச்சல், ஆங்கில அறிவு, நல்ல உடல் ஆரோக்கியம் என்பன இப்பயிற்சி பெறத் தேவையாகும்.

ஓர் ஆழ்கடல் மூழ்கு வீரர், பெரும் தண்ணீர் சூழ்ந்த நிலையில், வெளிச்சமே இல்லாத இடத்தில் வேலை செய்யக் கற்றுக்கொள்ளவேண்டும். ஆழ்கடல் மூழ்கு வீரருக்கு என்றே வடிவமைக்கப்பட்ட சிறப்பு ஆடை, 'டைவிங் பெல்' என்ற அமைப்புடன் இணைக்கப்பட்டிருக்கும். கப்பலின் 'சச்சுரேஷன் சேம்பர்' (Saturation Chamber) என்ற பகுதியிலிருந்து கடலுக்குள் ஆழ்கடல் மூழ்கு வீரர் இறக்கப்படுவார். 'டைவிங் பெல்'லில் இருந்து ஆழ்கடல் மூழ்கு வீரரின் சிறப்பு ஆடைக்குள் இணைக்கப்பட்ட குழாய்கள் மூலம் அவருக்குத் தொடர்ந்து வெதுவெதுப்பான நீரும் காற்றும் அளிக்கப்படும்.

ஆழ்கடல் மூழ்கு வீரர்கள் சுவாசிக்கும் முறையும் வித்தியாசமானதுதான். அவர்கள் சுவாசிக்கும் காற்று ஒக்சிஜனும் ஹீலியமும் கலந்ததாக இருக்கும். ஹீலியம் ரத்தத்தில் கரையாது என்பதே காரணம். சாதாரணமாக நாம் காற்றுடன் சேர்த்து சுவாசிக்கும் நைட்ரஜன், ஆழ்கடல் மூழ்கு வீரர்கள் கடலடிப் பகுதிக்குள் செல்லும்போது அங்குள்ள அசாதாரண அழுத்தம் காரணமாக ரத்தத்திலிருந்து வெளியேற ஆரம்பிக்கும். அது ஆழ்கடல் மூழ்கு வீரருக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தும்.

சில சமயங்களில் மரணம்கூட நேரலாம். எனவே, ஓர் ஆழ்கடல் மூழ்கு வீரர் தொடர்ந்து 15-20 நாட்களை ஆழ்கடல் பகுதியில் செலவிட்ட பின்னர், அவரது உடல் சாதாரண வெளிப்புற அழுத்தத்துக்குப் பழகுவதற்காக 'சாச்சுரேஷன் சேம்பரில்' வைக்கப்படுகிறார். ஆழ்கடல் மூழ்கு வீரர் வெளிப்புற அழுத்தத்துக்கு மெதுவாக மீளும் வகையில் அதில் வசதிகள் செய்யப்பட்டிருக்கும்.

# சட்டமீறல், மதுபோதை ஏற்படுத்தும் மரணங்கள்

சட்டத்தை மீறுவதாலும் மதுபோதையாலும் ரஷ்யாவில் கடந்த சில வாரங்களில் நூற்றுக்கணக்கானவர்கள் மரணமடைந்துள்ளார்கள்.

ரஷ்யாவில் கடந்த சில வாரங்களாக அதிகரித்து வரும் வெப்பம் காரணமாக உஷ்ணத்தைத் தணித்துக்கொள்ளும் வகையில் பலரும் நீர் நிலைகளைத் தேடிச் செல்கின்றனர். இவ்வாறு செல்பவர்களில் அநேகர் மது அருந்திவிட்டும், மதுபோதையில் தடை செய்யப்பட்ட நீர்ப்பகுதிகளில் நீந்துவதாலும் நீரில் மூழ்கி இறக்க நேரிடுகின்றது. கடந்த சில வாரங்களில் மட்டும் 300 க்கு மேற்பட்டவர்கள் இவ்வாறு நீரில் மூழ்கி இறந்துள்ளனர். இந்த இறப்புக்களுக்கு பிரதான காரணம் போதைப்பொருட்களை அருந்திவிட்டு தடைசெய்யப்பட்ட பகுதிகளில் நீந்தியமையே என்று அவசரகால அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் ரஷ்யாவில் நீந்தும்போது நீரில் மூழ்கி இறந்தோரின் எண்ணிக்கை 3000 ஆகும். ரஷ்யாவில் வார இறுதி நாட்களில் மக்கள், குளங்கள், ஆறுகள், ஏரிகளுக்குச் சென்று பொழுதைக் கழிப்பது பொதுவான நிகழ்வாகும்.



கடந்த வாரத்தில் ஒருநாளில் மட்டும் 63 பேர் நீந்தும்போது நீரில் மூழ்கி இறந்ததாக ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்தியொன்று தெரிவிக்கிறது. இறந்தவர்களில் அநேகர் மதுபோதையில் இருந்ததாக அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஏனையோர் ஆபத்தான மற்றும் இருண்ட பகுதிகளில் நீந்தும்போது மூழ்கி இறந்ததாகவும் அவர் கூறினார். அநேகர் அதிகளவு மது அருந்தியபின்னர் எச்சரிக்கை சமிக்ஞைகளை அலட்சியப்படுத்திவிட்டு நீந்துவதாலேயே நீரில் மூழ்கி இறக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிண்டரில் 'மை' விரயத்தைக் குறைக்கும் 'மென்பொருள்' அறிமுகம்



கணினியுடன் இணைக்கப்பட்டுள்ள 'பிரிண்டரில்' ஆக்கங்களைப் பிரின்ட் போடுவதற்கு உறுதுணையாக இருப்பது அதிலுள்ள 'டோனர்' (Toner) ஆகும். பிரின்ட் எடுக்கும் அளவிற்கு இந்த டோனரிலுள்ள மை (Ink) விரயமாவது நாம் அறிந்ததே. இந்த 'மை' விரயத்தை 75 வீதத்தில் குறைப்பதற்கு ஏதுவான வகையில், புதியதோர் மென்பொருள் (Software) அறிமுகமாகியுள்ளது. இன்க் கார்ட் (Ink gard) என்று இது

**இந்த மென்பொருளைப் பாவிப்பதன்மூலம் கணினிப் பாவனையாளர் தனது பிரிண்ட்டரில் உள்ள டோனரில் 'மை' விரயமாவதைக் கட்டுப்படுத்தும் வசதியைப் பெறுகின்றார். 'இன்க்கார்ட்' மென்பொருளை 'இன்ஸ்ட்டோல்' செய்துவிட்டால், தமக்குத் தேவையான விதத்தில் பிரின்ட்களைப் பெறமுடியும்.**

அழைக்கப்படுகின்றது.

கணினியில் வடிவமைக்கப்பட்ட ஒரு விடயத்தை/ஆக்கத்தைப் பிரின்ட் போடும்போது அதிலுள்ள எழுத்துக்களை வாசிக்க வேண்டியது முக்கியமான தேவையாக இருக்கின்ற சமயங்களில், எழுத்துக்களுடன் அதனை ஒட்டியுள்ள படங்கள், விளம்பரங்கள் போன்ற அவசியமற்ற பகுதிகளையும் சேர்த்தே பிரின்ட் போடப்படுகின்றது. இதனால், அப்பகுதிகளுக்கும் சேர்த்தே 'மை' விரயமாகின்றது. இன்றுவரை இதுவே நடைமுறையில் இருந்து வருகின்றது. எனினும், இதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி இவ்வாறு 'மை' விரயமாவதைத் தடுக்கும் பொருட்டே 'இன்க் கார்ட்' மென்பொருள் அறிமுகமாகியுள்ளது.

இந்த மென்பொருளைப் பாவிப்பதன்மூலம் கணினிப் பாவனையாளர் தனது பிரிண்ட்டரில் உள்ள டோனரில் 'மை' விரயமாவதைக் கட்டுப்படுத்தும் வசதியைப் பெறுகின்றார். 'இன்க்கார்ட்' மென்பொருளை 'இன்ஸ்ட்டோல்' செய்துவிட்டால், தமக்குத் தேவையான விதத்தில் பிரின்ட்களைப் பெறமுடியும். உதாரணத்திற்கு அதிகூடிய மையைக் கொண்ட தெளிவுகூடிய பிரதியைப் பெற வேண்டுமாயின், அதற்கான கட்டளையை கணினியினூடே பிறப்பிப்பதன் மூலம் கூடுதலான மையைக்கொண்ட பிரின்ட்டைப் பெறமுடியும். அவ்வாறே 'மை' (இன்க்) குறைந்த அளவிலான பிரின்டைப் பெறவேண்டுமாயின் அதற்கான கட்டளையைப் பிறப்பிப்பதன் மூலம் 'மை' குறைந்த பிரின்டைப் பெறமுடியும். அதாவது, தமது தேவைக்கு ஏற்ப பிரின்டரைக் கையாண்டு 'மை' விரயத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வசதியை இந்த 'இன்க் கார்ட்' மென்பொருள் வசதியாக அமைகின்றது. கறுப்பு, வெள்ளை மட்டுமன்றி வர்ண பிரின்டரிலும் கூட இவ்வாறே 'மை' விரயத்தைக் குறைத்துக் கொள்ள முடியும்.







மேலும், இந்த மென்பொருளானது எந்தவொரு இன்க் ஜெட் அல்லது லேஸர் ஜெட் பிரின்டரிலும் செயற்படுத்தக்கூடிய சிறப்பைக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 'வின்டோஸ் 2000' தொடக்கம் 'வின்டோஸ் செவன்' வரையில் அனைத்து கணினிகளிலும் மேற்படி இன்க் கார்ட் மென்பொருளை சேர்க்கக்கூடியதாக இருப்பது சிறப்பம்சமாகும்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியுஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, ஜூலை மாதம் 14 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday July 14, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org